Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் திசைரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 03 19-09-94 திங்கட்கிழமை ஓசை 213

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை
பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று 19-9-1994

## மாணவருக்கான இலவச சீருடை ஜனவரியில் வழங்கத் திட்டம்

பாடசாலை மாணவர்களிற்கு ஜனவரி மாதம் இலவச சீருடை வழங்கப்படும் என கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரன கொழும்பில் தெரிவித்தார்

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்களிற்கான இலவச சீருடை வரும் ஜனவரி மாதம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சர் மேற்கொண்டுள்ளார்-

இதற்காக இந்த அமைச்சில் 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்-

(88, றி)

# புலிகளின் பலத்தை தவறாக கணிப்பீடு செய்து விட்டோம்!

## கடற்படை சூட்டுக்கு மீனவர் பலியானார்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மீனவ இளைஞர் ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 2.45 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் வைத்து நடைபெற்றது.

கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி ஆதிகோவிலடியைச்சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா கருணாகரன் (வயது 21) என்பவரே பலியானார். இவருடன் சென்ற மீனவர் றெஜலையழகன் கடலில் குதித்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## கற்பிட்டி கடற்பரப்பில் 24 பேரைக் காணவில்லை

### 3 படகுகளும் மாயம்

(கொழும்பு)

மன்னாருக்கு உணவுப்பொருள்களை ஏற்றிச்சென்ற கடற்படையினரின் மூன்று படகுகளைக் காணவில்லை என கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி தெரிவித்தது இப்படகில் சென்ற 24 பேரின் நிலை குறித்தும் தெரியவரவில்லைஎனமேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கற்பிட்டிக் கடற்பரப்பில் 12 சிங்கள மீனவர்களும் எட்டு வியாபாரிகளும் காணாமற் போயுள்ளதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

## பதவியா மோதலில் பொலிசார் இருவர் பலி

பதவியா பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், பொலிசாருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் இரு பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் படுகாயமுற்றார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த வியாழனன்று பதவியா ஏழாம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் இரு பொலிசார் கொல்லப்பட்டனர். துப்பாக்கிச் சண்டை முடிவுற்றதையடுத்து இப் பகுதியிலிருந்து இரு பொலிசாரின் சடலங்கள் கண்டு எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## மணலாற்றுப் பகுதி மீது விமானக் குண்டு வீச்சு

மணலாறு மாவட்டத்தில் ...

## இனப்பிரச்சினை தீராமல் போனதற்கு காரணம் அது என்கிறார் காமினி

[கொழும்பு]

கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளின் பலத்தை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தவறாக மதிப்பீடு செய்ததனாலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது போனதாக எதிர்க் கட்சித்தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான காமினிதிசாநாயக்கா கொழும்புத் தமிழ் தினசரி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில்.

தேர்தல்தொகுதியின் அடிப்படையில் பார்த்தால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றி பெரு வெற்றியல்ல பாராளுமன்றத்தில் சிறிய கட்சிகளை வைத்துக்கொண்டு பெற்றவெற்றி பெரிய வெற்றியல்ல என மேலும் அவர் தெரிவித்தார்.

கேள்வி: முன்னர் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளராக டி.பி. விஜேதுங்கவை தெரிவு செய்தது இப்போது திடீரென நிலை மாறியது ஏன்?

பதில்: ஐ.தே. கவின்சிரேஷ்ட தலைவர்களும் செயற்குழுவும் என் பெயரை முன்வைத்ததால் ஜனாதிபதி சம்மதத்துடன் நான் தெரிவானேன்.

கேள்வி: கடந்த பொதுத் தேர்தலில் மத்திய மாகாணம், கொழும்பு மாவட்டம்,

( 6ஆம் பக்கம் பார்க்க)

## முன்னைய அரசுவிட்டதவறை நாம் ஒருபோதும் விடமாட்டோம்

## சுவிஸ் பாராளுமன்றம் முன் தமிழ் அகதிகள் மறியல்

சுவிட்சர்லாந்திலிருந்து தம்மை நாடு கடத்த வேண்டாம் எனக்கோரி நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர் கடந்த வியாழக்கிழமை சுவிஸ் பாராளுமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கையிலிருந்து சுவிட்சர்லாந்து சென்று அங்கு அரசியல் தஞ்சம் கோரியிருந்த பல ஆயிரக்கணக்கான இலங்கையரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்ததைத் தொடர்ந்தே இவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## முப்படைத்தளபதிகளுக்கு பேச்சு குறித்து விளக்கம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான பேச்சு நடத்துவது குறித்து விளக்கமளிக்கும் பொருட்டு கடந்த வெள்ளியன்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் முப்படைத் தளபதிகளையும் சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஓரிரு சுற்று பேச்சுக்களுடனேயே பிரச்சினைக்கு தீர்வு காண அரசு முயல்வதாக தெரிய வருகிறது.

இதேசமயம்முன்னதாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக பிரதமர் சந்திரிகா, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ், பிரதி பாதுகாப்புஅமைச்சர் கேணல் அநுருத்தரத்வத்த ஆகிய மூவரும் கூடி ஆராய்ந்தனர்.

## விமானக் குண்டு வீச்சு

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சியாமார் செட்டி ரக குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளன.

கடந்த புதனன்று இக்குண்டுவீச்சு இடம்பெற்றது. மேலும் எல்லையோர படைமுகாம்களிலிருந்து மணலாற்று பகுதிமீது தொடர்ச்சியான எறிகணை வீச்சும் இடம்பெற்றது.

## 173 ஆயுதப் படையினர் இவ் வருடம் மட்டும் பலி

(கொழும்பு)

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து இதுவரையில் 112 இராணுவத்தினர் உட்பட 173 ஆயுதப்படையினர் கொல்லப்பட்டனர் எனவும் 373 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர் எனவும் ஆறு பேர் காணாமற் போயிருப்பதாகவும் அரச வட்டாரங்களிலிருந்து கிடைக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணி மோதலில் 3 புலிகள் வீரச்சாவு

முல்லை மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற திடீர் மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த,

★ 2-ம் லெப். நந்தன் (சபாரத்தினம் கவிதாஸ் கச்சாய்வீதி, கொடிகாமம்)

★ 2-ம் லெப். நாதன் (சற்குணராஜா கோமகன், லச்மில் கல்வளை சண்டிலிப்பாய்).

★ வீரவேங்கை அரசமணி (இலங்கைநாதன்பார்த்தீபன்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாம் ஒருபோதும் விடமாட்டோம்

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

நாம் கடந்த காலத்திலிருந்து பாடங்களைக் கற்றுள்ளோம். முன்னைய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகள் எவ்வாறு முறிவடைந்தன என்பதை பரிசீலித்து வருகிறோம். முன்னைய அரசு விட்ட தவறை நாமும்விடோம் முன்னைய அரசுடனான புலிகளின் பேச்சுகள் தோல்வியடைந்தது என்பதற்காக தற்போதைய அரசு புலிகளுடன் பேசக்கூடாது என்று அர்த்தமல்ல. ஏனெனில் காலம் இப்போது மாறிவிட்டது இதனால் இம்முறை மாற்றம் இருக்கும். இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த சண்டே ஐலண்டிற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய தமிழ்க்குழுக்கள் ஜனநாயக வழிக்கு திரும்பிவிட்டன- விடுதலைப் புலிகள் மட்டுமே ஆயுதம் தாங்கியுள்ளனர்- இதனாலேயே அவர்களை ஜனநாயக வழிக்கு கொண்டுவர பேச்சு நடத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளோம்- சமாதானப் பேச்சு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## ஜனாதிபதி தேர்தலில் ஏ. ஜே. ரணசிங்கா போட்டி?

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்னாள் தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா ஆலோசித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவருக்கு சென்ற பொதுத் தேர்தலில் ஐ தே க, வின் சார்பில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

## எறிகணை வீச்சு ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் வடமராட்சி கிழக்கு பகுதியில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று பகல் வடமராட்சி கிழக்கு பகுதி மக்கள் குடியிருப்புக்களை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் வெற்றிலைக்கேணி இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டதில் பொதுமகன் ஒருவர் படு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரத்திற்கென சந்திரிகா, காமினி யாழ். வர விருப்பம்

(கொழும்பு)

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் போது பிரசார நடவடிக்கைகளுக்காக யாழ் குடாநாட்டிற்குச் செல்வதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்காவும், ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் காமினி திசாநாயக்காவும் விருப்பம் கொண்டுள்ளதாக சிங்கள வாரஇதழான லங்காதீப தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் செல்ல தீர்மானித்துள்ள இவர்கள் வடக்கில் விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சகல பகுதிகளிலும் பிரசார நடவடிக்கையில் ஈடுபட விருப்பம் கொண்டுள்ளதாகவும் மேலும் அது தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாண பயணத்திற்கான பயண ஒழுங்குகள்தொடர்பாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவும் எதிர்க்கட்சித்தலைவர் காமினி திசாநாயக்காவும் தனிப்பட்ட முறையில் விடுதலைப்புலிகளுடன் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடுவார்கள் என அவ் வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாகப் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

இதேசமயம் யாழ்ப்பாண தேர்தல் விடயம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு காமினி திசாநாயக்கா மூவர் அடங்கிய குழுவொன்றை அமைத்துள்

[ 6ஆம் பக்கம் பார்க்க )

## மட்டக்களப்பில் ராணுவம் தாக்குதல்; எட்டு விடுதலைப்புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் முகாமொன்றை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட நேரடி மோதலின் போது எட்டு விடுதலைப்புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர். இரு ஆதரவாளர்களும் வீரச்சாவடைந்தனர். சிறிலங்கா இராணுவத்தரப்பிற்கு பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது.

மாவடி முன்மாரிப் பிரதேசத்திலுள்ள நெடுஞ்சேனைப் பகுதியில் கடந்த 15-ம்திகதி இம்மோதல் இடம்பெற்றது.

இம் மோதலையடுத்து ஹெலிக்கொப்டர் ஒன்று தொடர்ச்சியான வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு அவ்விடத்தில் இருதடவை இறக்கி ஏற்றப்பட்டது.

இம் மோதலின் போது வீரச்சாவடைந்த:

★ 2-ம் லெப். வளவன் (சிறிஸ்கந்தராசா ஜெயசீலன், மட்டக்களப்பு)

★ 2-ம் லெப். தவம் (முருருப்பிள்ளை தங்கத்துரை மட்டக்களப்பு)

★ 2-ம் லெப். இசையாளன்/ஐங்கரன் (சிவப்பிரகாசம் சந்திரபாபு, மட்டக்களப்பு)

★ 2-ம்லெப். விதுசன்/நளின் (கனகரட்ணம் ரமணன் மட்டக்களப்பு) /

★ 2-ம் லெப். சஜவரதன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவாக தென்மராட்சியில் ஊர்தி பவனி

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாட்களில் நான்காம் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். குடாநாடெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

மூன்று கோட்டங்களிலும் விசேட பந்தல்களில் திலீபனின் உருவப்படத்திற்கு பொது மக்கள் மலர் சொரிந்து அஞ்சலி செய்தனர்.

இது இவ்வாறிருக்க நேற்று தென்மராட்சியில் தியாகி திலீபனின் நினைவுருவப் படத்தினை தாங்கிய ஊர்தி ஒன்று எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ், கோட்டை வடிவிலான ஊர்தியிலேயே திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு எடுத்து வரப்பட்டது.

இந்த சமயம் வீதிகளில் பெருந்திரளான மக்கள் நின்று திலீபனின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை நேற்று தீவகக் கோட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளில் பறவைக் காவடி சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. யாழ்-ஐந்துசந்தி பகுதியில் இருந்து இந்தப் பறவைக்காவடி ஊர்வலமாக தீவகக் கோட்டத்தினால் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு வரும் அரியாலை நாச்சிமார் கோவிலை சென்றடைந்தது. தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய உழவு இயந்திர ஊர்தியில் இரு இளைஞர்கள் ஒன்றாக இணைந்து இப் பறவைக் காவடியை எடுத்துச் சென்றனர்.

(தி, 86, 22)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

மூன்று பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ளவும் ந. அருணாசலம், நாமகள் ஒழுங்கை கொக்குவில் கிழக்கு கொக்குவில் (9440)

### ந.சுந்தரம்பிள்ளையின் அக்கரைச்சீமையில்

இந்த நாட்டு மக்களின் யதார்த்தமான சுவையான கதை. ஆபாசம் இல்லை குடும்பத்தினர் அனைவரும் வாசிக்கலாம். ஆசிரியர் எழுதியவை: 250 நாடகங்கள் 47 சிறுகதைகள் பூபாலசிங்கம்புத்தகசாலை. (9434)

### தமிழ்-ஆங்கில நாடகங்கள்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் கெட்டிக்காரர்கள், 'முதலாம்பிள்ளை' நூல்களில் உள்ள நாடகங்களை மாணவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடிக்கலாம். உதவிக்கு நாடுங்கள் ந. சுந்தரம்பிள்ளை 30 கடையிற்சுவாமி வீதி நீராவியடி யாழ்ப்பாணம் (9435)

### பாலர் ஆசிரியராகலாம்...

கடைசித்தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம், 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (9449)

## நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கு ஓகஸ்ட் மாதத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் நான்கு கிழமைகளுக்கும் சேர்த்து ஒன்றாக வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

ஓகஸ்ட் மாதத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் இன்னமும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு வந்து சேரவில்லை.

இவ் உலர் உணவுப் பொருட்கள் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் ''கோமாரி'' கப்பலில் ஏற்றப் படுவதாக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்தனர்.

இவ் உணவுப் பொருட்கள் வந்து சேர்ந்த...

## சாணக்கியபுரி புதைகுழியில் 40 சடலங்கள் மீட்பு

இந்தியாவின் தலை நகர் புதுடில்லியில் இருக்கும் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மற்றும் தூதுவர்கள் வசிக்கும் சாணக்கிய புரி எனப்படும் அயலலுறவுத் துறைக்கு சொந்தமான நிலப்பகுதியில் நாற்பது குழந்தைகள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருந்த புதை குழி ஒன்று கட்டிடத் தொழிலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்திய அயலுறவுத் துறைக்கு சொந்தமான நிலப்பகுதியில் வெளிநாட்டு தூதுவரகங்கள் மற்றும் அயலுறவு அலுவலகங்கள் ராஜதந்திரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் வசிக்கும் பகுதியில் இத்தகையதொரு புதை குழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை பலத்த அதிர்ச்சி தரும் ஒன்றாக இருப்பதாக செய்தியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## இறுதிப் போட்டியில் இந்தியா வெற்றி

(கொழும்பு)

நான்கு நாடுகள் பங்கு கொண்ட சிங்கர் உலக கிண்ண வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட்போட்டியில், நேற்றுமுன்தினம்இறுதியாட்டத்தில் இந்திய அணி இலங்கை அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

கொடுக்கப்பட்ட 25 ஓவர்களில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது, தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 24 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களை பெற்றது.

ஆட்டத்தில் சிறந்த வீரராக மொகமட் அசாருதீன் தெரிவானார். போட்டித் தொடரின் சிறந்த வீரராக அர்ஜுன் ரணதுங்க தெரிவானார்.

## கல்வி அமைச்சு மாநாட்டில் தமிழ்மொழி புறக்கணிப்பு

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் தேசிய பாடசாலை அதிபர்களுக்கான மாநாடு நடைபெற்றபோது அதில் தமிழ்மொழி முற்றாக புறக்கணிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இந்த மாநாட்டில் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப்பகுதிகளிலிருந்து தமிழ் மொழி மூல தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இம் மாநாட்டில் கல்வி உயர்கல்வி அமைச்சர்கள் றிச்சர்ட் பத்திரான மற்றும் அமைச்சர்கள் பேராசிரியர் விஸ்வா வர்ணபாலா ஆகியோர் தமது உரைகளை முழுமையாக சிங்களத்திலேயே நிகழ்த்தினர் என்பதும் சமகால மொழிபெயர்ப்பிற்கோ அல்லது உரையின் மொழிபெயர்ப்பு கிடைப்பதற்கோ வழி செய்யப்பட்டிருக்கவில்லை

இதனால்தமிழ்மொழி மூலத் தேசிய பாடசாலை அதிபர்களுக்கு இம் மாநாடு மிகுந்த ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாக அமைந்து விட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


### திருவிளக்குப் பூசை

(கொழும்புத்துறை)

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ பர்வவர்த்தினி அம்மன் கோவிலில் மாதாந்த திருவிளக்குப் பூசை இன்று பிற்பகல் 4.00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் இடம்பெறும்,

சுமங்கலிபூசை, திருவிளக்குப் பூசை, வழிபாட்டை அடுத்து அம்பாள் வீதியுலா என்பன இடம்பெறவுள்ளன- (24)

### கண்ணீர் அஞ்சலி



### சங்காபிஷேகம்

(மானிப்பாய்)

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய சங்காபிஷேகம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாலை விஷேட திருவீதியுலாவும் அதனையடுத்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. விழாவில் சிவஸ்ரீ நாகேஸ்வரக் குருக்களும் தொடர் விரிவுரை நிகழ்த்திய திரு. ஆறு திருமுருகன் அவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (07)

## பனம்பொருள் அபி.சபைக்கு புதிய தலைவர் நியமனம்

பனம் பொருள் அபிவிருத்தி சபையின் புதிய தலைவராக பெருந்தோட்டத் துறை அமைச்சில் செயலாளராக கடமை ஆற்றிய அநுரா ஏக்கநாயக்கா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பனம் பொருள் அபிவிருத்தி சபையின் ஆரம்ப கர்த்தாவும் கடந்த 13 வருடங்களாக சபையின் தலைவராகவும் விளங்கிய கே. நடராசாவின் இடத்திற்கு இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.





ஆண்டுமலர்-94

வெளியீட்டு நிகழ்ச்சி

பிரியமானவர்களே

இன்று மாலை 4.30 மணிக்கு

யாழ். இந்துக் கல்லூரியின்

குமாரசுவாமி மண்டபத்தில்

அறிஞர்களின் கருத்துரைகள்
உங்கள் சிந்தனையைச் சீர்செய்யும்

திலகநாயகம் போல் குழுவினரின்
தமிழிசை உங்களை மகிழ்வாக

### ராவயவிற்கு எதிராக வழக்கு

ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் மற்றும் வெளியீட்டாளர் ஆரியபாலா சந்திரகுப்தா ஆகியோருக்கு எதிராக ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். 1992 நவம்பர் 15ல் ராவய இதழில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்று தொடர்பாகவே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### போசாக்கு பராமரிப்பு பூங்கா

(யாழ்ப்பாணம்)

நவாலி மயூரன் குடியிருப்பில் உள்ள சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா தற்போது புதுப்பொலிவுடன் இயங்கி வருகின்றது. இப் பூங்காவிற்கென பெறப்பட்ட கட்டடம் முற்று முழுதாக புனரமைக்கப்பட்டு அதில் பூங்கா மற்றும் பாடசாலை என்பன இயங்குகின்றன. சுமார் நூறு பிள்ளைகள்வரை உள்ள இப் பராமரிப்பு பூங்காவில் மூன்று ஆசிரியைகள் கடமையாற்றி வருகின்றனர். விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் தீவகக் கோட்டத்தினரின் மேற்பார்வையில் இயங்கிவரும் இப் பூங்கா சென்ற ஆடி மாதம் தனது முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. (22)

## நினைவு கூருகின்றோம்...

**19-09-1994**

1986-ம் ஆண்டு இதே தினத்தில் திருமலை-மூதூர், எல். பி 03 பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். துரைச்சாமி** (பொடியப்பு விநாயகமூர்த்தி-பெருவெளி, மூதூர்-திருமலை)

1989-ம் ஆண்டு அம்பாறை-அட்டாளச்சேனைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். தேவா** (சாமிதம்பி கிருஷ்ணமூர்த்தி-பாண்டிருப்பு கல்முனை-அம்பாறை)

யாழ் நீர்வேலிப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சிறி** (சற்குணராசா பாஸ்கர்-தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி-யாழ்)

1991-ம் ஆண்டு வவுனியா-செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**டேவிட் - செழியன்** (குணரத்தினம் செல்வகுமார்-இராஜேந்திரன்குளம்-வவுனியா)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**திமிலன்** (சதாசிவம் ஜீவரட்ணம்-பாண்டிருப்பு-02, கல்முனை-அம்பாறை)

**கப்டன் இம்ரான்** (தில்லையம்பலப்பிள்ளை ஜெகதீசன்-துறைநீலாவணை-மட்டு)

**நேரு** (பொன்னையா குமரதாஸ்-கிண்ணியா-திருமலை)

**வில்லியம்** (சாமுவேலப்பு விஜயராசா-23, பாடசாலைவீதி-திருமலை)

**லெப். எமில்டன்** (பூச்சி கிருஷ்ணமூர்த்தி-153ம் கட்டை, முறிகண்டி-கிளிநொச்சி)

**மல்லிகா** (செல்வலட்சுமி இராஜலிங்கம்-5ம் வாய்க்கால்-கிளிநொச்சி)

**சுமன்** (இராசையா சந்திரகுமார்-நொச்சிக்குளம், ஓமந்தை-வவுனியா)

**சிவகாமி** (யோகராணி இலக்குமணன் பூவரசங்குளம்

புனர்வாழ்வுப் பகுதியின[illegible]ர் தெரிவித்தனர்.

இவ் உணவுப் பொ[illegible]ருட்கள் வந்து சேர்ந்[illegible] ஓகஸ்ட் மாதத்திற்கான [illegible] உலர் உணவுப் பொருட்[illegible]கள் நான்கு கிழமைகளுக்[illegible]கும் சேர்த்து வழங்கப்ப[illegible]வுள்ளதாக தெரிய வரு[illegible]கிறது. (பா, தி)

## முழு நிலா விழா

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ் மாயன்றம் காலாண்டுக்கு ஒரு முறை நடாத்தும் ''முழு நிலா விழா'' இன்று மாலை 6.00 மணிக்கு மன்றத்தில் அமைந்துள்ள பாரதி மேடையில் விழாத் தலைவர் செல்வன் ந- மோகனேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்குபிரதம விருந்தினராக திரு. திருமதி டாக்டர் தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் வட்டவைப் பொறுப்பாளர் திரு: சோழன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

''நிலா'' சஞ்சிகையைத் திருமதி தியாகராசா வெளியிட்டு வைப்பார்

இலக்கிய பரிசில் வழங்கல் சிறுகதை, தனிநடிப்பு, கவிதை, குரலோசை, மெல்லிசை ஆகிய வற்றில் பரிசு பெற்றவர்கட்கு. ஒளி, ஒலி நிகழ்ச்சி வில்லிசை, நாடகம் என்பவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சியாக பட்டிமன்றம் இடம் பெறும்.

பெண்மையை பெரிதும் காட்டுவது சிலப்பதிகாரமா? கம்பராமாயணமா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும். (24)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அத்தியடி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 22ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும். (22)



சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி
திரு. சுப்பிரமணியம் பொன்னம்பலம்
F. R. C. S( Edin )

தோற்றம் 1928 - 01 - 16 | மறைவு 1994 - 09 - 16

எங்கள் வைத்தியசாலையில் கடந்த 18 வருடங்களாக சேவையாற்றி கடந்த 16 - 09 - 1994 அன்று சிவபதமடைந்த எங்கள் பாசமிகு சத்திர சிகிச்சை நிபுணரின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, செல்விகள், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**வைத்தியர்கள், ஊழியர்கள்.**
விடுதி இல: 16, 30
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி- 10369)

திலகநாயகம் போல் குழுவினரின்
தமிழிசை உங்களை மழையாக
நனைவிக்கும்
இவற்றுக்கும் மேலாக;
உங்கள் வருகை
எங்களை ஆசுவாசப்படுத்தும்
நங்கூரத்தை
உயிர் வாழ வைக்கும்.

வருவீர்களல்லவா?

அன்புடன்

[illegible]



(சி-10368)

[illegible] ஓமந்தை-வவுனியா)

**சிவகாமி** (யோகராணி இலக்குமணன் பூவரசங்குளம் -வவுனியா)

**காமராஜி** (ஆத்மஜோதி இராமையா-முரசுமோட்டை, பரந்தன்-கிளிநொச்சி)

**2ம் லெப். றொசான் - றோகான்** (ஆறுமுகம் சந்திரன் -பள்ளிமுனை-மன்னார்)

**கப்டன் சீலன்** (தாமோதரம்பிள்ளை இளம்பிறைநாதன்-சங்கத்தானை-சாவகச்சேரி)

**கப்டன் லோகிதன்** (சின்னத்தம்பி கோகிலானந்தம்-கரவெட்டி மேற்கு-யாழ்)

**லெப். தம்பி** (பாலசுப்பிரமணியம் தேவராசா -கல்வியங்காடு யாழ்)

**பிருந்தன்** (சுந்தரலிங்கம் இந்திரலிங்கம்-அல்வாய் வடக்கு, வியாபாரிமூலை-பருத்தித்துறை)

**கார்த்திகா** (வசந்தா நடராசா-செட்டிபுலம், வேலணை கிழக்கு)

**துப்பன்** (மகாதேவா குமணன்-மடத்தடி, சாவகச்சேரி வடக்கு-யாழ்)

**ஜீவா** (சுப்பிரமணியம் கமலநாதன்-6ம்வட்டாரம், வேலணை மேற்கு)

**மில்டன்** (தட்சணாமூர்த்தி சங்கரதாஸ் உரும்பராய் மேற்கு யாழ்)

**டென்சியா** (லிங்கநாயகி பத்திநாதன்-முள்ளியான் -வெற்றிலைக்கேணி)

1992-ம் ஆண்டு வெற்றிலைக்கேணிச் சேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். வேலன் - கிறிஸ்** (வீணுகோபால் கிருஷ்ணகுமார்-புலோலிதெற்கு -யாழ்)

1993-ம் ஆண்டு மட்டு-அம்பாறை மாவட்டத்தில் தொப்பிகலகாட்டுப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் எமது முகாமைச் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

**கரிகரன்** (சிவலிங்கம் கேமச்சந்திரன்-கொக்கட்டிச்சோலை-மட்டு)

**ஜீவமுரளி - கலைராஜ்** (சிவலிங்கம் சிவசுரேஸ்குமார்-உன்னிச்சை-மட்டு)

இதேதினம் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(10365)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# இந்தியச் சதியை அம்பலப்படுத்திய தியாகச் சுடர் திலீபன்

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி சிறிலங்கா அரசின் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினாலும் அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியினாலும் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான வரலாற்றுப் புகழ்மிக்கதென புழுகப்பட்ட உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கையானது உச்ச நிலைக்குச் சென்றுவிட்ட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை திடீர் என ஒரு பின்னடைவு நிலைக்குத் தள்ளியது.

ஆகவே இந்த உடன்படிக்கை தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கப்பட வேண்டும் என விரும்பும் இந்த உலகின் ஒவ்வொரு பிரஜையாலும் நிராகரிக்கப்பட்டு வந்தது.

அப்படியிருந்த போதிலும் முதன் முதலாக நேரடியாக இந்தியா தமிழீழத்தில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்ததன் பின்பு எமது பிரச்சினையில் தலையிட்டு மத்தியஸ்தம் செய்தது தமிழ் நாட்டில் உள்ள ஆறுகோடி மக்களும் இந்தியாவின் தலையீட்டால் நடைபெறும் மத்தியஸ்த முயற்சிகளை கவனித்து வருவதால் அம்மக்களுக்கு மதிப்பளிக்க வேண்டியமை போன்ற செயல்முறைக்கு அப்பாற்பட்ட சக்திஇருந்தது.

## மீறல்கள்

தன்னிச்சையாக இரு அரசுகளும் செய்துகொண்ட ஒப்பந்தமானது அதில் உள்ள அம்சங்களின் பிரகாரம் அமுல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இலங்கை அரசின் திட்டமிட்ட சதிக்கு இந்திய அரசு ஒத்துப்போக ஆரம்பித்தது.

★ பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்தே

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணம் இணைக்கப்பட்டு அதற்கென கலை, கலாசாரங்களைக் கொண்ட சிங்கள நாட்டிலிருந்து வேறுபட்ட சிறப்பம்சம் பொருந்திய பகுதியாக ஏற்றுக் கொள்வதாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்த் தேசிய இனத்தின் தேசியத் தன்மையை கூறுகளாக்கி உருக்குலைக்கும் நோக்குடன் பல புதிய குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

★ அரசின் இந்தச் சதித் திட்டத்திற்கு இசைவாக வடக்கு கிழக்கிலிருந்து வெளியேறிய மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் என்ற கூற்று துணை நிற்பதாகிறது.

★ இவையனைத்தும் போக குடியேற்றப்பட்ட சிங்களக்காடையர்களுக்கு ஆயுதப்பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியதுடன் இந்தக் குடும்பங்களுக்கு 'ஊர்காவற்படை' என்ற பெயரும் இடப்பட்டது மேலும் வடக்கு கிழக்கில் உள்ள பல தமிழ்ப் பாடசாலைகளிலும் பொது விடங்களிலும் புதிய பொலிஸ் இராணுவ நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

## திலீபனின்போராட்டம் ஆரம்பம்

தனது பிராந்திய நலனுக்குள் சிறிலங்கா பணிந்துவிட்டது என்ற போலி வெற்றிக்களிப்பில் இந்தியா இருந்துவந்தது ஈழத்தமிழ் மக்களின் முடிவற்ற போராட்டத்திற்கு ஒரு நிரந்தரமான அமைதித் தீர்வு காணுவது பற்றி சிந்தித்ததாகத் தெரியவில்லை. சிறிலங்கா அரசோ தமிழீழ மக்கள் எத்தனையோ ஆயிரம் உயிர்களைப் பலி கொடுத்து வெற்றிப் பாதையில் கொண்டு செல்லப்பட்ட விடுதலைப் போராட்டத்தினை சிதைத்து விட ஆனமுயற்சிகள் அனைத்தும் செய்து வந்தது. இதற்கு பதவி மோகம் கொண்ட துரோகக் கும்பல்களையும் பயன்படுத்திய இந்திய இரா

தும் தேசிய விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளை மிக விரைவில் நசுக்கி விடலாம், இந்த போராட்டத்தினை இன்னும் ஒரு சந்ததி வரை பின்னடையச் செய்வதன் மூலம் இலங்கை அரசு எதிர் காலத்தில் பிராந்திய நலனுக்கு எதிரான போக்கினை கடைப் பிடிக்கும் நிலையில் மீண்டும் ஈழ விடுதலைப் போரை இலங்கை அரசுக்கு எதிராக பாவிக்க முடியும் என எண்ணியிருந்த இந்தியா திலீபனின் புதிய அகிம்சை ஆயுதத்தைக் கண்டு எதிர்பாராத வியப்படைந்தது.

திலீபன் தனது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த நாள் தொட்டே எதிர்பாராத வெகுஜன ஆதரவு திரள ஆரம்பித்தது இதனை இந்திய அரசோ அல்லது அதன் உளவு நிறுவனங்களோ எதிர்பார்க்கவில்லை. இதனால் உண்ணாவிரதப் போரை பலவீனப்படுத்திவிட வேண்டும் மக்கள் ஆதரவை சிதைவடையச் செய்யவேண்டும் என இந்திய அரசும் அதன் உளவு நிறுவனங்களும் துடியாய்த்துடித்தன.

## மாபெரும் மக்கள் எழுச்சி

திலீபனின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைய ஆரம்பித்தது. தமிழ்மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் எழுச்சியடைய ஆரம்பித்தது. ஆரம்பத்தில் தமிழ் மக்கள் கூட சிறிலங்கா அரசினதும், இந்திய உளவு நிறுவனங்களினதும் நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவே இந்தப் போராட்டம்நடைபெறுவதாக எண்ணினர். நாளுக்கு நாள் திலீபனின் உடல்நிலை மோசமடைய ஆரம்பித்தது ஆனால் இந்தியா பாராமுகமாக இருந்து வருவதை அவதானித்து வந்தனர் அணி அணியாக திலீபன் உண்ணாவிரதமிருந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதிகளில் அலைமோதி இந்திய எதிர்ப்பு கோஷங்களை எழுப்ப ஆரம்பித்தனர். பல இடங்களில் மறியல் போராட்டங்கள் செய்தனர்.

கொண்ட இந்த சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை விடுதலைப் புலிகளின் உண்ணாவிரதம்' எனக் குறுக்கிவிட முனைந்தன. மேலும் கொச்சைப்படுத்தின. பகீரதபிரயத்தனம் செய்தன.

## வாக்குறுதிகளைநம்ப வேண்டாம்-திலீபன்

திலீபனின் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து தமிழீழத்தில் எழுந்துள்ள கொந்தளிப்பு நிலையை கண்டு இந்தியா அதைக்கட்டுக்குள் கொண்டு வந்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் அன்றைய இந்தியத்தூதர் ஜே. என். டிக்ஸிற் திலீபனின் உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள் நாம் ஒப்பந்தத்தில் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்க்க முயற்சிக்கின்றோம் என வெறும் வாக்குறுதிகளைக் கூறினார். ஆனால், ஏற்கனவே இந்தியாவினால் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை சரியாகக் கடைப்பிடிக்காததனால்தான் இந்தப் போராட்டத்தை நடத்துவதாகக் குறிப்பிட்டு வெறும் உறுதிமொழிகளை நம்பி தாம் உண்ணாவிரத போராட்டத்தைக் கைவிடக் கூடாதென திலீபன் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனால் வாக்குறுதிகள் மூலம் நசுக்கி விடலாம் என்ற இந்தியாவின் தந்திரமுயற்சிகள் திலீபனிடம் தோற்றுப் போய் விட்டன.

## தமிழ் நாட்டில் இருட்டடிப்பு

திலீபனின் அகிம்சைப் போராட்டம் தமிழக மாநிலத்தில் பலவழிகளாலும் தாக்கம் விளைவிக்க ஆரம்பித்தது. இதனை தன்னால் இயன்ற வரைக்கும் தமிழ் நாட்டில் இந்திய வெகுஜன தொடர்பு சாதனங்கள் இருட்டடிப்புச் செய்தன.

இருந்தும் ஏற்கனவே இலங்கை இனப்பிரச்சினைசம்பந்தமாக இந்திய அரசு இலங்கை அரசுடன் இணைந்து ஈழத்தமிழரின் முதுகில் குத்தி

தமிழ் நாட்டில் திலீபனின் உண்ணாவிரதம் வெகுஜன கொந்தளிப்பை ஏற்படுத்தினால் மத்திய அரசின் அதிகாரத்திலிருந்த இந்திரா காங்கிரசின் பதவிக்கு ஆபத்து வரும் இது தவிர வெளியுலகில் இந்தப் போராட்டம் வெளிப்படுமிடத்து உலகநாடுகளுக்கு ஒரு சாதுவான மிருகமாகத் தென்படும். இந்தியாவின் மீது ஐயங்கள் எழும் இதனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிப்பது வெளிப்படும். இதனால் இந்தியாவின் ஆக்கிரமிப்புத் தன்மை வெளிப்படுவதை மறைக்க முடியாது போய் விடும் என்பதை ராஜீவ் அரசு நன்குணர்ந்திருந்தது.

## இராணுவத்தின் முதல் தோல்வி

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் 'பட்டாலியன்களாக' வந்திருந்த இந்திய இராணுவம் உலகின் நான்காவது பலம் பொருந்திய படை திலீபன் கொடுத்த இந்தப் பாரிய தாக்குதலால் செய்வதறியாது கைகட்டி நின்று பார்க்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. இதுவே புலிகளின் மனஉறுதியிடம் அவர்கள் தோற்ற முதல் முதல் தோல்வியாகி விட்டது

## முறியடிக்கப்பட்டது

இந்தியா தன்னாலானமட்டும் இந்த போராட்டத்தை மறைக்க முற்பட்டபோதிலும் பல சர்வதேச சுயாதீன தொடர்புசாதன நிருபர்களின் வடபகுதி விஜயம் மூலமும் தமிழ் நாட்டு காந்தி காமராஜர் கட்சித் தலைவர் நெடுமாறன் போன்ற தமிழ் நாட்டு தலைவர்களின் வரவினாலும் இந்தியாவின் பிரயத்தனங்கள் பெருமளவில் முறியடிக்கப்பட்டன.

ஆகவே திலீபனின் தியாகம் உலகின்சர்வ வல்லமை பொருந்தியதும், தெற்காசியாவின் முரட்டுக்காளையாகவும் திக

---

ஊர்பான் பல்கலைக்கழகத்துடன்

## சவேரியார் குருத்துவகல்லூரி இணைக்கப்பட்டது

(நல்லூர்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் உள்ள புனித சவேரியார்குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் துறை ரோமாபுரியிலுள்ள ஊர்பான் பல்கலைக்கழகத்துடன்இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இதன் மூலம் இக்குருமடத்தில் மெய்யியலில் இளங்கலைமாணி பட்டநெறிகளை நடாத்தி பட்டம் வழங்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

(17)

---

## கண்ணீர் அஞ்சலி

### திரு. சபாரெத்தினம் கவிதாஸ் (நந்தன்)

எமது சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளரும் தற்போது கூட்டுறவு பரிசோதகருமாகிய திரு: சி. சபாரெத்தினம்அவர்களினதும்எமது சங்கத்தின்கணக்கு பதிவாளராகிய திருமதி சபாரெத்தினம் பிரேமாவதி அவர்களினதும் சிரேஷ்ட புத்திரன் சபாரெத்தினம் கவிதாஸ் (நந்தன்) 17 9 94-ல் மணலாறு மாவட்டத்தில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவை எய்தியுள்ளார். அவருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம். இப்பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
பனை தெ.வள.அ. கூட்டுறவு சங்கம்
கொடிகாமம்.

(9450)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை பிருந்தன்

சுந்தரலிங்கம் - இந்திரலிங்கம் (சூரி)

சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்து சிறிலங்கா கூலிப்படைகளின் சிறைக்கூடங்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வந்த தமிழ் மக்கள் எவரும் ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒன்றரை மாதமாகி விட்ட போதிலும் விடுவிக்கப்படவில்லை.

★ அவசரகாலச் சட்டம் உடன் நீக்கப்படும்

மேலும், வடக்கு - கிழக்கு இணைந்த இடைக்கால அரசு ஸ்தாபிக்கப்படும் என அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது ஆனால் அதுவும் காலந்தாழ்த்தப்பட்டு சாக்குப்போக்குகள் காட்டப்பட்டு வந்தன.

★ தமிழ் இனம் ஒரு தேசிய இனம். அதன் பாரம்பாரிய பிரதேசமான

பயன்படுத்திய இந்திய இராணுவம் ஆயுதங்களைக் களைந்து விடுவதில் இருந்த வேகத்தை ஒப்பந்த அமுலாக்கலில் காட்டவில்லை.

எனவே இவை அனைத்தையும் உலகிற்கு சுட்டிக்காட்டியும் ஒப்பந்த அமுலாக்கலை துரிதப்படுத்த வேண்டியும் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலீபன் தமது முதற்கட்ட அதிஉச்ச அகிம்சைப்போராட்டமான சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

### இந்தியாவின் எதிர்பாராத வியப்பு

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைந்

ங்களில் மறியல் போராட்டங்கள் செய்தனர்.

### செய்தித் தொடர்பு ஊடகங்களை பாவித்தது இந்தியா

இந்த நிலையில் மக்கள் எழுச்சியைச் சிதைவடையச் செய்யும் முகமாக இந்திய வெகுஜன செய்தி தொடர்பு சாதனங்களை திட்டமிட்டு செயலாற்ற ஆரம்பித்தன.

இலங்கையில் சமாதான பணியில் உள்ள இந்திய அமைதி இராணுவத்தின் பொழுதுபோக்கிற்கு எனக் கூறிக் கொண்டு 'அன்புவழி' 'நேசக்கரம்', 'வெற்றிமாலை' என ஒரு நாளுக்கு மூன்று வேளை நிகழ்ச்சிகளை மக்கள் விடுதலையை

ஈழத்தமிழரின் முதுகில் குத்திவிட்டதாக அறிவித்து தமிழ் நாட்டின் முன்னணிக் கட்சிகள் பல இணைந்து இந்திய இலங்கை ஒப்பந்த நகல்களை நடு வீதியில் வைத்து தீயிட்டுஎரித்து அதன்சாம்பரை டில்லியில் உள்ள இந்திய மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருந்தன. ஆகவே திலீபனின் உண்ணாவிரதப் போராட்டமும் தமிழ் நாட்டுக்கு எட்டுமிடத்துபிராந்திய நலனை மட்டும்தீர்க்கும் ஒப்பந்தத்தை அமுலாக்குவது மிகக் கடினமாகிவிடும் என்பதை இந்திய மத்திய அரசு ஏற்கனவே உணர்ந்திருந்தது.

இந்திய மாநிலங்கள் இடையேயும் குறிப்பாக

முரட்டுக்காளையாகவும் திகழும் இந்தியாவை ஆட்டம் காண வைத்தது

அன்றைய இந்திய அரசு எம்மை எமது நலன்களை முழுமையாக கருத்தில் கொண்டு ஒடுக்குமுறைக்குஉள்ளாக்கியது திட்டமிட்ட இந்த ஒடுக்கு முறையை எதிர்த்து அதனை முழுமையாக தோல்வியுறச்செய்யமுடியாவிடினும், கூட வெளியுலகிற்கு இந்தியாவின்அடக்குமுறைப் போக்கை அம்பலப்படுத்துவதில் மாபெரும் வெற்றி கண்டவர் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர்இ. திலீபன்என்பது முற்றிலும் உண்மையே.

ஈழநாதம்- 24-9-90


வீரவேங்கை பிருந்தன்

சுந்தரலிங்கம் - இந்திரலிங்கம் (சூரி)

தாய்மடியில் 7-11-1973 தாயகமடியில் 19-9-1991

19-9-91 அன்று மணலாறு மாவட்டத்தில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவை அடைந்த வீரவேங்கை.

க. சுந்தரலிங்கம்
குடும்பத்தினர்

வியாபாரி மூலை சந்தி
பருத்தித்துறை. (9448)


## கிராம சேவகர்களுக்கு புதிய அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடமையாற்றும் அனைத்து கிராம அலுவலர்களுக்கான புதிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்புதிய அடையாள அட்டைகள் அந்தந்தப்பகுதி பிரதேச செயலர்கள் ஊடாக அனைத்து கிராம சேவை அலுவலர்களுக்கும் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது (05)

## 21 வெற்றிடங்களுக்கு 21,000 பேர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் பதவிக்கு வடகிழக்கில் இருந்து இருபத்தோராயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக வடகிழக்கு மாகாணசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கில் உள்ளபிரதேச செயலகங்களில் இருபத்தியொரு வெற்றிடங்கள் மட்டுமே உள்ளன இதில் ஏற்கனவே கிழக்குப்பகுதி பிரதேச செயலகத்தில் உள்ள 4 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் இவர்களுக்கான பரீட்சை ஒழுங்குகளை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கையை மாகாணசபை மேற்கொண்டுவருவதாகத் தெரிவித்தார். (05)

# மருத்துவ சோதனை அறிக்கை பெற 14 நாட்கள் அவகாசம் போதாது

(யாழ்ப்பாணம்)

கல்வி அதிகாரிகளின் கடுமையான பணிப்புரைகளிற்கும் வைத்தியசாலை நிர்வாகத்தின் வசதிக் குறைவிற்கும் இடையில் சிக்கித் தவிக்கின்றோம் எனத் தெரிவிக்கின்றனர் அண்மையில் நிரந்தரமாகியபயிலுநர் ஆசிரியர்கள்.

யாழ். குடா நாட்டில் அண்மையில் கணிசமான அளவு பயிலுநர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர். இவர்கள் நிரந்தரமானதும் கல்வி அதிகாரிக்கு சமர்ப்பிக்கவேண்டிய வைத்திய அறிக்கையை பதின்நாலு நாட்களுக்குள் தமக்கு அனுப்பி வைக்குமாறு உதவிக் கல்விப்பணிப்பாளர் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க யாழ். போதனா வைத்தியசாலையில் இந்தளவு எண்ணிக்கையானவர்களிற்கு பதின்நாலு நாட்களுக்குள் வைத்திய பரிசோதனையை மேற்கொண்டு வைத்திய அறிக்கையை வழங்க முடியாது உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கான வளங்கள் போதனா வைத்தியசாலைக்கு பற்றாக் குறையாக இருப்பதாலேயே இவர்களிற்கான வைத்திய பரிசோதனையை முடித்து வைத்திய அறிக்கையை பதின்நாலு நாட்களுக்குள் வழங்க முடியாத நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனால் மேற்படி ஆசிரியர்கள் தமக்கு நிரந்தரமான தன் பிற்பாடு கிடைக்கவேண்டிய சம்பள உயர்வுகளையும், விசேட கொடுப்பனவுகளையும் இழக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக பயிலுனர் ஆசிரியர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் நல்லூர் கோட்டங்களில் நியமனமாகியவர்களிற்கே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(88) (நி)


## OPEN UNIVERSITY OF SRI LANKA

VACANCIES
VISITING TUTORS IN ENGLISH
FOR JAFFNA REGIONAL CENTRE

**Qualifications**

B. A. Special Degree in English or B. A. General Degree with English as a subject or Bachelor's Degree (B. Sc or LLB) in the English medium with English Language Teaching experience or The First Class Trained Teachers' Certificate with at least 3 years experience after training or The Diploma or Certificate in the teaching of English as a Second Language from the University of Colombo or an equivalent qualification obtained from a recognised University or other Institutions after having satisfactorily completed a Course of Study of not less than 10 months duration

Applicants should provide details of past and present employment and Interview will be held at OUSL, Nawala, Nugegoda on 06-10-94

**FOR FURTHER DETAILS**

Please contact immediately Regional officer (OUSL) with your Bio-data on or before 22-09-94

S. A. Gnanenthiram
Regional officer, Jaffna.

Brown Road,
Kokuvil,
Jaffna. (9445)

# யாழ். வைத்தியசாலை குறைபாடுகள் சுகாதார அமைச்சிற்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளருக்கும் புதிய சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பை அடுத்து யாழ் போதனா வைத்தியசாலையின் முக்கிய குறைகள் அடங்கிய அறிக்கை ஒன்று சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் செல்வி கனகரத்தினம் கடந்த வாரம் சுகாதார அமைச்சின் செயலாளரைச் சந்தித்து யாழ். வைத்தியசாலையின் நிலைமைகளை எடுத்து விளக்கியதாகவும் இதனை செவிமடுத்த செயலாளர் உடனடியாக வைத்தியசாலையின் முக்கிய குறைகள் பற்றிய விபரங்களை சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி கனகரத்தினம் கடந்த 15ஆம் திகதி இலண்டனுக்குப் பயணமாவதற்கு முதல் இத் தகவலை யாழ்ப்பாணத்திற்கு அறிவித்ததை அடுத்து பதில் பணிப்பாளரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை உடனடியாக சமூக நல, சுகாதார அமைச்சர் பௌசிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையின் தேவைகள் சம்பந்தமான அந்த அறிக்கையில் கழிவகற்றல் கருவியின் அவசியம் பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மற்றும் வைத்திய, தாதிகள், விடுதி, நிர்வாகப்பகுதி ஆகிய கட்டடங்கள் சேதமடைந்திருப்பதனால் அவை உடன் மீளத் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பதும், கட்டி முடிவுறாமல் இருக்கும் ஐந்து மாடிக் கட்டடத்தை முழுமையாக கட்டி முடித்தால் அதை உபயோகப்படுத்திக் கொண்டு மேற்படி கடட்டங்களை புனரமைக்கலாம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மருந்துக் களஞ்சியக் கட்டடத்தின் அவசியம் பற்றியும் அது முழுமையாக கட்டி முடிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

இதற்கான பதில் அடுத்து வாரமளவில் யாழ் வந்த சேரும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (தி, பா)

## சுகாதாரசேவை பணிப்பாளர் பிரதமரே நியமிப்பார்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனத்திற்கு கடந்த ஆறாம் திகதி கொழும்பில் சுகாதார பணிப்பாளர் பணிமனையில் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இது தொடர்பான பணிப்பாளர் நியமனம் பிரதமரின் கவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்பு இந்த நியமனம் சுகாதாரப் பணிப்பாளரினாலேயே வழங்கப்பட்டு வந்ததாகவும் தற்போது அரச உயர் பதவிகளுக்கான நியமனங்கள் யாவும் பிரதமரின் நேரடி கவனத்திற்குட்பட்டே வழங்கப்படுவதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (சி)

## கொக்கோ தோட்டத்தில் மூன்று எலும்புகூடுகள் மீட்பு

(கொழும்பு)

சென்ற ஆட்சியாளர் காலத்தில் காணாமற்போனவர்கள் என நம்பப்படும் 3 நபர்களின் எலும்புகள் மாத்தளையிலுள்ள கொக்கோ தோட்டமொன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வாரியபொல கொக்கோ எஸ்டேட் தோட்டமொன்றிலேயே இவ் எலும்புகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன இப் பெருந்தோட்டம் சிறிய ஏற்றுமதி பயிர்கள் திணைக்களத்திற்கு சொந்தமானதாகும்.

எலும்புகளை பரிசோதனை செய்து,அறிக்கைகளை சமர்ப்பிக்கும்படி பொலிசாருக்கு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 7-ம் ஆண்டுநினைவலைகள்



## குளம், வாய்க்கால் புனரமைப்பு

யாழ் குடாநாட்டில் நீர் வளத்தைப் பேணி பாதுகாக்கும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் குளங்கள், வாய்க்கால்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் கட்டடி வெள்ளத் தடுப்பணை, திக்கம் நீர்வலைச் சோலை வாய்க்கால், வெல்லங்கரை வாய்க்கால், தனங்கிளப்பு வில்லியம்பிடி உவர் நீர் தடுப்பணை, சீதையக்காடு உரத்தி நீர்த்தடுப்பணை, அள

## கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும், அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடாத்தும் முழு நிலாநாள் அறிவியற் கருத்தரங்கு இன்று சுன்னாகம் பெரியமதவடி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் அரங்கில் புதிய அரசின் அரசியல் பொருளாதாரத் திட்டங்கள் என்னும்விடயம்பற்றிமு திருநாவுக்கரசு உரை நிகழ்த்தவுள்ளார்.

## அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம்/நல்லூர் கல்விக் கோட்டங்களுக்கானபாடசாலை அதிபர்களின் கூட்டம் நாளை பிற்கல் 2. மணிக்கு நல்லூர் ஸ்தான சீ. சீ. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி யாழ்ப்பாணம் / நல்லூர் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறியத்தருகின்றார்.

# எம்பிலிப்பிட்டிய மாணவர் விவகாரம் 13பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியாவில் 1989இல் காணாமற் போன 36 பாடசாலை மாணவர்கள் தொடர்பான விவகாரத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என கருதப்படும் 13 பேர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரி உயர் நீதி மன்றத்தில் இவர்களுக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்யப்படும்எம்பிலிப்பிட்டியபாடசாலை முன்னாள் அதிபரும் ஆயுதப்படையை சேர்ந்தோரும் இந்த சந்தேக நபர்களில் உள்ளனர்.

# மின்வழங்காத காலத்திலும் மின்மானிக்கு வாடகை?

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் சில பகுதிகளில் பழைய மின் கட்டணங்களை அறவீடு செய்யும் நோக்கில் மின்கட்டணபாக்கிசிட்டைகள் வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

உரும்பராய் பகுதி மின் பாவனையாளரிற்கு அவர்கள் கடந்தகாலங்களில் செலுத்த வேண்டிய மின் பாக்கித்தொகைகளுக்குரிய சிட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுவருகின்றன.

இச்சிட்டைகளில் மின்சாரம் குடாநாட்டில் விநியோகிக்காத காலப்பகுதிக்குரிய மின்மானி வாடகையும் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்படி பகுதி மக்கள் உரும்பராய் ஊரெழு பிரதேச சபைக்கு எதிராக கண்டனம் தெரிவித்துள்ளனர் (88) (நி)

## வழக்கு முடிந்தபின்பே ஹபறண புறப்படும்

கொழும்புத் துறைமுகப் பகுதியில் ''ஹபறண'' கப்பல் விபத்துக்குள்ளாகி துறைமுகப் பகுதிக்கு ஏற்படுத்திய சேதம் தொடர்பாக ''ஹபறண'' கப்பல் கம்பனி மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இக்கப்பல் வட பகுதிக்கென ஏற்றப்பட்ட சுமார் 2000 மெற்றிக் தொன் உரத்துடன் கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கப்பல் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு முடிவடையும் பட்சத்திலேயே இக் கப்பல் புறப்பட அனுமதிக்கப்படும் என தெரியவருகின்றது.

துறைமுக அதிகார சபையே இக்கப்பல் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளது. மேக்கன்ரைல் சிப்பிங் லைன்ஸ் எனப்படும் தனியார் கம்பனிக்குச் சொந்தமான இக் கப்பல் ''றுகுணு''வுக்குப் பதிலாக இம் மாதம் 6ஆம் திகதி முதல் தடவையாக உரத்துடன் பருத்தித்துறைக்கு புறப்பட்ட வேளையே விபத்திற்குள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் விபத்து மூலமாக துறைமுகப் பகுதிக்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. (பா, தி)

## தாயகம் திரும்பியோருக்கு சுயதொழில் புரிய உதவி

### யு. என். எச். சி. ஆர். ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்று கடந்த காலங்களில் திரும்பி வந்துள்ள மக்களுக்கு புதிய சுயதொழில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஐ நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் யாழ் கிளை முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

இந்த மக்களின் கஷ்ட நிலையைக் கருத்தில் கொண்டு சுயமான வேலை வாய்ப்புத் திட்டங்களை அவர்களிடம் அறிமுகப்படுத்தும் நோக்குடன் இதுபற்றிய செய்தியை ஐ நா. உயர்ஸ்தானிகராலயத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கருவாடு உற்பத்தி, கோழி வளர்ப்பு (இது கணவனை இழந்த பெண்களுக்குரியது) விவசாயம் ஆகிய வேலைத் திட்டங்களே நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வேலைத் திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று பொறுப்பேற்று நெறிபடுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

1992,93,94 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து திருப்பிவந்து யாழ் மாவட்டத்தின் பல இடங்களில் வசிக்கும் மக்களுக்கு மாத்திரமே இத் திட்டத்தின் அடிப்படையில் புதிய வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. (தி, பா)

## தம்பி குழுவினர் தாக்கி அண்ணன் படுகாயமுற்றார்

(யாழ்ப்பாணம்)

தனது வயலில் அத்து மீறி நுழைந்து உழுது கொண்டிருந்த தம்பியை தடுக்க முனைந்த அண்ணன் ஒருவர் மண்வெட்டியாலும், கத்தியாலும் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்தார்.

வட்டு கிழக்கு வட்டுக்கோட்டையில் நடந்த இச்சம்பவத்தின் போது வேலுப்பிள்ளை அருந்தவராசா (வயது 49) என்பவரே தம்பியாரினாலும் அவருடன் சேர்ந்தவர்களாலும் தாக்கப்பட்டவராவார்.

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டேன்

## வானுறையும் தெய்வத்திற்காய்





# மேஜர் அப்துல்லா

கணபதிப்பிள்ளை நகுலகுமார்

மண்ணில்: 20-07-1963 | மண்ணிற்காக: 05-10-1987

## திதி: 19 - 09 - 1994

அன்னை தமிழீழ மண்ணின்
இன்னல் தீர்க்கச் சென்றீர்
கண்ணில் தீயைச் சுமந்தே
களங்கள் ஆடி நின்றீர்
எண்ணம் யாவும் உங்கள்
இலக்கின் மீதே கொண்டீர்
கொண்ட கொள்கை காக்க
கொடிய இன்னல் சுமந்தீர்
அஞ்சிச் சரண் புகாது
நஞ்சை நீங்கள் உண்டீர்
உயிரை இழக்கும் போதும்
தலைவன் பெயரை உரைத்தீர்
உங்கள் நினைவை நாளும்
நாங்கள் சுமந்து செல்வோம்
வெல்வோம் விரைவில் ஈழம்தன்னை

இன்று போராளிகள், நண்பர்கள் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்

(9441)

நீர் தடுப்பனை, சீதையக்காடு உரத்தி நீர்த்தடுப்பனை, அளத்தில் குளம், சிரவின் குளம் போன்றவற்றை திருத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எமதுநீர்வளத்தை பேணும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுவரும் இந் நடவடிக்கையின் மூலம் ஏராளமான விவசாயிகள் நன்மையடையவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விபரம் அனுப்ப பணிப்பு

(நல்லூர்)

அதிபர்களாக கடமை புரிபவர்களில் முகாமைத்துவப் பயிற்சி அளிக்கப்பட உள்ள அதிபர்களின் பெயர் விபரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் கல்வி வலயம் 1ற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கோட்டக்கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார். (17)

## விசுவமடுவில் கயிறு உற்பத்தி

தும்பு தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் விசுவமடு வட்டத்திலுள்ள வள்ளுவர்புரம் கிராமத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கயிறுஉற்பத்தி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தும்பு உற்பத்தியில் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் உற்பத்தி நிலையத்தில் தற்போது நாளொன்றுக்கு நூறு கிலோ கயிறு உற்பத்தி செய்யப்படுகிறது.

இவ் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதனூடாக இருபது பேர்வரை வேலை வாய்ப்பை பெற்றுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது

## போட்டியிட மாட்டேன்

### குமார் பொன்னம்பலம் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் ஆனால் தமிழர் ஒருவர் போட்டியிட்டால் முழுமையான ஒத்துழைப்பை தான் வழங்கத் தயாராக இருப்பதாகவும் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் திகதி குறிப்பிடப்பட்ட நிலையில் பி.பி சியின் சிங்கள சேவைக்கு அவர் பேட்டியளிக்கையில் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில் சென்ற பொதுத் தேர்தல் தொடர்பாக இன்னும் தான் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகஅவர்மேலும் தெரிவித்தார்.

சென்ற பொதுத் தேர்தலில் கொழும்புத் தேர்தல் மாவட்டத்தில் குமார் பொன்னம்பலம் தலைமையில் போட்டியிட்டசுயேட்சைக்குழுவிற்கு சுமார் 9000 வாக்குகள் மட்டும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

சுன்னாகம் வணிகர் கழக பிரதேசத்திற்குட்பட்ட
சகல துறை வணிகர்களுக்கும்,
ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

### எம் மண்ணின் விடிவிற்காக
### உண்ணாநோன்பிருந்து சகச்சாவடைந்த
### தியாகி லெப்: கேணல் திலீபன்

அவர்களின் 7-ம்ஆண்டு நினைவின் 6-ம் நாளினை சிறப்பிக்குமுகமாக நாளை 20-9-94 செவ்வாய்க்கிழமை காலை7-30மணிக்குசுன்னாகம் கதிரமலைச் சிவன் வீதியில்அமைக்கப்பட்டுள்ளவிசேட பந்தலில் மேற்கொள்ளவிருக்கும் அடையாள உண்ணாவிரதத்தில் சுன்னாகம் வணிகர் கழக பிரதேசத்திற் குட்பட்ட சகல துறை வணிகர்களையும், ஊழியர்களையும், பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.


முக்கிய குறிப்பு-:

வணிகர்கள் நாளை (20-09-94) தங்கள் வணிக நிலையங்களை முழுமையாகப் பூட்டி காலை 7.30 மணிக்கு சுன்னாகம் வணிகர் கழக காரியாலய முன்றலில் ஒன்று கூடி ஊர்வலமாக உண்ணாவிரத மேடைக்கு அணிதிரண்டு செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நன்றி.

பொதுச்செயலாளர்,
சுன்னாகம் வணிகர் கழகம்.

(சி-10359)



## வைத்திய கலாநிதி எஸ். பொன்னம்பலம்

நோயுற்ற போதிலும் -எம்
நோய் தீர்த்த நல்லானை - கொடு
நோய்தான் தீர்த்துவிட்டதோ!
நேசமுடன் அருகிலிருந்து
நேர்வழி காட்டிய பேராசானே!
ஓட்டமெடுக்கும்
சிந்தனைச் சிற்பி(?)களுடன் இணையாது
ஒப்பரேசன் தியேட்டரதில்
ஓய்வற்று உறக்கமின்றி
ஓடித்திரிந்த ஔடதமே!
ஓர்கண ஒப்பாரியுடன் நாம்
ஓய்வெடுக்காது - நீர்
கற்பித்த கலையுடனும்
அளித்திட்ட அன்புடனும்
சிக்கெடுக்கும் சிகிச்சை செய்ய
சிரம் கொண்டு
உந்தன் வழியில்...

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி பிரார்த்தனைக் கூட்டம் 20-9-94 (நாளை) காலை 7.00 மணிக்கு மருத்துவ பீடத்தில் நடைபெறும். அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்.

மருத்துவ ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(9452)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்.

## சிந்தனைக்கு..

அற்ற குளத்தில் அறுநீர் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

- ஔவையார்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 19 09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்- 05

# மண்ணையும் மக்களையும் நேசித்த மருத்துவன்

சத்திரசிகிச்சை நிபுணரும், வைத்திய கலாநிதியுமான சுப்பிரமணியம்பொன்னம்பலம் அவர்களின் இழப்பானது தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும். என்பதில் ஐயம் ஏதுமில்லை தமிழ் மண்ணையும் மக்களையும் நேசித்த அமரர் பொன்னம்பலம் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும், தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவை மகத்தானதாகும், மறக்க முடியாதது மாகும்.

அமரர் டாக்டர் பொன்னம்பலம், இலங்கையில் உள்ள முன்னணி சத்திர சிகிச்சை நிபுணர்களில் ஒருவர். அவரிடம் இருந்த ஆற்றல், திறமை என்பனவற்றிற்கு அவர் தனக்கான வாய்ப்பு வசதிகளை இலங்கையின் ஏனைய பகுதிகளிலோ அன்றி இலங்கைக்கு வெளியிலோ தேடிக் கொண்டிருக்க முடியும். ஆனால் தமிழ் மக்களின் மீதும், மண்ணின் மீதும் அவர் கொண்டிருந்த பற்றானது. அவரை நீண்ட காலமாக பல்வேறு நெருக்கடியின் மத்தியிலும் தான் நோய் வாய்ப்பட்ட நிலையிலும் சொந்த மண்ணில்தங்க வைத்திருந்தது.

சுமார் 18 வருடங்களுக்கு மேல் தனது அயராத உழைப்பை தமது மக்களுக்காக அவர் ஆற்றியுள்ளார். இவ் 18 வருட காலமானது, இலங்கைத்தமிழர் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத துயர்களும், நெருக்கடிகளும் நிறைந்த காலமாகும். இனக்கலவரங்கள் என்றும், இராணுவ நடவடிக்கைகள் என்ற போர்வையில் இராணுவ அட்டூழியங்களும், அடாவடித்தனங்களும் கட்டவிழ்த்து விடப்பட்ட காலமுமாகும்.

அத்தோடு உயிருக்கஞ்சியும், சுகபோக வாழ்விற்காகவும் தம்மக்களையும், மண்ணையும் 'அம்போ' எனக் கைவிட்டு அநேக டாக்டர்களும், துறை சார்ந்தவர்களும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும், வெளிநாடு

# ஓய்வு, ஒழிவின்றி மக்களுக்காய் உழைத்த சேவையாளன் வைத்தியகலாநிதி பொன்னம்பலம்

கடந்த 18 வருடகாலமாக தமிழீழ மக்களுக்கு உயிர்காக்கும் உன்னத பணியைச் செய்துவந்த மூத்த சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்கள், இம் மண்ணைவிட்டு மீளாத்துயில் கொண்டுள்ளார் என்ற செய்தியை கேள்விப்பட்டதும் நாம் பேரதிர்ச்சிக்குள்ளானோம்.

சிங்கள அரசின் இன அழிப்புப் போரால் மக்கள் படும் துன்பங்கள் ஆயிரம். குண்டு வீச்சுக்களினாலும், எறிகணை வீச்சுக்களினாலும் காயமடைந்துவரும் தமிழ் மக்கள் அனைவரிற்கும் யாழ். போதனா மருத்துவ நிலையம் பூரணசிகிச்சை அளித்து உயிர் காக்கும் பணியில் ஈடுபடுகின்றது.

எம்மண்ணில் நடைபெறுகின்ற போர்ச் சூழ்நிலையையும், பொருளாதாரத் தடையையும் காரணம்காட்டி புத்திஜீவிகள் பலர் இம்மண்ணை விட்டு வெளியேறியுள்ளனர். இதில் கணிசமானளவு மருத்துவர்களும், வைத்திய நிபுணர்களும் அடங்குகின்றனர். இவ் இக்கட்டான நிலையில் எதிரியின் இராணுவ நடவடிக்கையினால் கடலிலும், தரையிலும் காயமடைகின்ற அனைத்து உயிர்களையும் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு சில சத்திரசிகிச்சை நிபுணர்களில் ஒருவராக வைத்திய கலாநிதி பொன்னம்பலம் திகழ்ந்தார்.

இன்று யாழ் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்களும், மற்றும் ஊழியர்களும் தமது கடமைக்கு மேலாக பன்மடங்கு வேலைகளை ஓய்வின்றி உறக்கமின்றிச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளார்கள். இந்த வரிசையில்தான் வைத்திய கலாநிதி பொன்னம்பலமும் கடந்த 18 வருட காலமாக இப் போர்ச் சூழலில் நின்றுகொண்டு காயமடைந்த அனைத்துப் பொது மக்களினதும், போராளிகளினதும் உயிரைக் காப்பாற்றியுள்ளார். இவர் ஒரு சத்திரசிகிச்சை நிபுணராக இருந்ததினால் இவரின் சேவையானது இப் போர்ச் சூழ்நிலைக்கு மிகவும் அவசியமாக இருந்ததுடன் சில சமயம் அவசரமாகவும் தேவைப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக வரும்போது இவரின் சேவைக்கு நேரகாலம் கிடையாது. இது மணித்தியாலக் கணக்காக இரவு - பகலாக ஓய்வின்றி, நித்திரையின்றி நீண்டுகொண்டேபோகும். எனினும் இவர் சோர்வடையமாட்டார். சத்திர சிகிச்சை செய்யும்போது எப்பவும் இவர் வாய் கர்நாடக சங்கீதத்தை இசைக்கும். இவர் பழகுவதற்கு அன்பானவர். எளிமையானவர். சகல ஊழியர்களிற்கும் பயம் ஏற்படாதவாறு இயல்பாகப் பழகுவார். மற்றவர்களின் துன்பங்களைக் கேட்டறிந்து ஆறுதல் கூறுபவர். மருத்துவ மாணவர்களிற்கு கல்வி புகட்டும் போதும் சரி, வாட்டில் உள்ள நோயாளர்களை பார்வையிடுவதென்றாலும் சரி எப்பவும் கலகலப்பாகவும், நகைச்சுவையாகவும் இருப்பார்.

சத்திர சிகிச்சை மண்டபத்தில் எவ்வளவு வேளைப்பளு வந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் கலகலப்பாக இவர் வேலைசெய்வதினால் மற்ற ஊழியர்களும் மனச் சோர்வின்றி வேலை செய்வார்கள். இவர் தனது வேலையின் போது எதிர்நோக்கிய கஷ்டங்கள் பல அதிலும் குறிப்பாக எமது மண் இந்திய இராணுவத்தினரால் ஆக்கிரமிப்புக்குள்ளான போது அவர்பட்ட வேதனைகள் சொல்லில் அடங்கா. ஆனால் இவற்றை எல்லாம் பின்பு ஒரு தடவை நகைச்சுவையுடன் கூறினார். அதில் 1987-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10-ம் திகதி வைத்தியசாலையில் புகுந்த இந்திய இராணுவம் வைத்தியர்கள், ஊழியர்கள், நோயாளர்கள் உட்பட நூற்பதிற்கும் மேற்பட்டோரை கொடூரமாகக் கொலை செய்த போது தான் அங்கு கடமையில் இருந்ததாகவும், கொலை வெறியை முடித்த இராணுவம் ''எங்கே டாக்டர் பொன்னம்பலம் எங்கே டாக்டர் பொன்னம்பலம்'' எனத்தேடி வர அவர்கள் கொன்று குவித்த நோயாளர்களின் வைத்தியசாலை ஊழியர்களின் சவத்தோடு சவமாக படுத்ததாகவும் பின்பு இவர்கள் தேடிவிட்டுப் போனதாகவும் குறிப்பிட்டார். அதன் பின்பு தான் கிட்டத்தட்ட 25 நாட்கள் அடிப்படை வசதிகள் நீர், உணவு போன்றன கிடைக்காத நிலையிலும், உதவிகள் இன்றியும் வைத்தியசாலையிலேயே தங்கியிருந்து சேவை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் அத்துடன், தனக்கும், தனது வீட்டாருக்கும் இடையில் அந்த நாட்களில் எதுவித தொடர்பும் இல்லை என்றும் இதனால் தனக்கு என்ன நடந்ததோ என்று மனைவி பிள்ளைகள் தவித்ததாகவும் பின்பு தான் ஒரு மாதம் கழித்து வீடு போனபோது தன்னை மறுபிறப்பு எடுத்து வந்துள்ளதாக நினைத்து குடும்பத்தார் சந்தோசத்தில் அழுததாகவும் கூறினார்.

இவ்வாறு பல இன்னல்களுக்கு முகம் கொடுத்த இவர் பல கஷ்டங்களுக்கு மத்தியில் தனது உடல் நிலையைக்கூட கவனிக்காது உயிர் காக்கும் உன்னத பணியை செய்துவந்தார். இவர் வயதிலும் படிப்பிலும் தான் மூத்தவரே யொழிய செயலில் என்றும் இளைஞன்தான். அவரின் நடை செயற்பாடுகள் யாவுமே சுறுசுறுப்பானவை. இவர் இறுதியில் நோய்வாய்ப்படுகின்ற வரையும் சோர்வடையவில்லை. இறுதிவரையும் கடமையில் ஈடுபட்டுள்ளார். ஆனால் கடைசிக் காலங்களில் தனது நோயைப் பற்றி உணர்ந்தபடியாலோ என்னவோ மனச் சோர்வடைந்து காணப்பட்டார். கலகலப்புக் குறைந்து காணப்பட்டார். கடமைக்கிடையில் கிடைக்கும் ஓய்வை அமைதியாகக் கழிப்பார். ஆனால் கடமை செய்வதை மட்டும் விட்டுவிடமாட்டார். வைத்தியராக இருந்து நோயின் பிடியில் சிக்கிக் கொண்டு இருக்கும்போதும் ஏற்படும் மனவேதனைகளையும் தனக்குள்ளே மறைத்து வைத்து தனது உயிர் காக்கும் உன்னத பணியை இறுதி வரை செய்த அந்த உத்தமரை என்றும் தமிழீழ மண் நினைவுகூரும்.

டாக்டர்
பத்மலோஜினி (சாந்தி)
மருத்துவப் பிரிவு,
விடுதலைப் புலிகள்.

## மண்ணை நேசித்த மனிதன் பொன்னம்பலம்

- புதுவை இரத்தினதுரை

காத்தல் கடவுள் நீ
நீத்தார் பெருமைக்கும் நீயே உவமை
'' பொன்னம்பலம் ''
ஒரு மனிதனின் பெயரல்ல...
ஒரு புனிதனின் திருநாமம்
எத்தனை பேரிடம் எமன் வந்தான்
நீ கத்தியோடு சத்திர சிகிச்சை அறையில் நின்றாய்
வந்தவன் வாசலோடு திரும்பினான்
நேற்று உன்னைத்தேடி அவன் வந்தபோது;
எங்களுக்கு எதுவும் கூறாமல்,
உடன்பட்டு ஏன் புறப்பட்டுப் போனாய்?
பட்டமும், பதவியும் சிம்மாசனமாகிய தேசத்தில்...
'' பாவப்பட்ட மக்களுக்கு ''
சாமரம் வீசும் சேவகனாக நீயிருந்தாய்
மாட்டு வைத்தியனின் வீட்டுக்குப் போனாலே...
பேச்சு வாங்கவேண்டிய காலத்தில்,
உன்வீட்டுக்கு வந்தால் மட்டும்
' புல்லாங்குழலோசை ' வரவேற்கும்
புன்னகைக்கும் முகம் வந்து கைபிடிக்கும்
வெடிகுண்டு வைத்த இடத்திலிருந்து
வெளியேறும் மக்களைப்போல
எம்மண்ணிருந்து
அடித்துப் புரண்டுகொண்டு
'' மருத்துவப் பறவைகள் '' சிறகு விரித்தபோது
நீ மட்டும்;
அறுகம்புல் போல மண்ணைப்பற்றிப் படர்ந்தாய்
வைத்தியசாலை வளவுக்குள் வந்துவிட்டால்
உனக்கு இருபது வயது இளமை வரும்
ஓடித்திரிவாய்
உறக்கம் மறப்பாய்
போராளிகளுக்கு சேவை செய்வதே
உனக்குச் '' சிவபூசை ''
பக்கத்துவீட்டுப் பிணந்தின்னிக் கழுகுகள்
எங்கள் மரங்களில் வந்து எச்சமிட்டபோது
எம்மக்களின் மேனியெங்கும்
அமிலமழைபட்டுக் குருதி வழிந்தபோது
ஆக்கிரமிப்பு நாகங்கள்
படம் விரித்து ஆடியபோது
'' ஆபத்பாந்தவனாக ''
'' அநாதைரட்சகனாக ''
அருகிலேயே நின்றாய்.
கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும்
பாரதியின் கண்ணனாகப் பக்கத்திலேயே நின்றாய்.
மனைவியை நேசித்தளவு மண்ணை நேசித்தாய்
தாயைப்போல தாயகத்தையும் பூசித்தாய்
வேருக்கு நீர்கொடுத்த விழுதுநீ
தரவை வெளியில் மாடுமேய்ப்போன் கூட
விழியோரம் 'கனடாக் கனவு''களில் மிதக்கும்போது
ஊரின் புழுதித் தெருக்களிலிருந்து
வேர்பிரிந்துபோக விரும்பாத விருட்சம் நீ

களும் இலங்கையின் ஏனைய பகுதிகளும், வெளிநாடுகளுக்கும் ஓட்டபெடுத்தகாலமாகும்.

இந்நிலையில் தமிழ் மக்கள் பட்ட ஒட்டுமொத்த துயர்களுக்கு தானும் முகம் கொடுத்துக்கொண்டு, தமிழ் மக்களுக்கு தன்னால் ஆன சேவையை நேரம் காலம்பாராது ஆற்றியவர் டாக்டர் பொன்னம்பலமாகும். இவ்வாறு இவர் ஆற்றிய சேவை எத்தனையோ தமிழ் மக்களின் இன்னுயிர்களை காப்பாற்றி வாழ வைத்தது.

இந்திய இராணுவம் காட்டுமிராண்டித்தனமாக யாழ். போதனா வைத்தியசாலைக்குள் புகுந்த படுகொலையின் பின்னரும் துணிவுடன் செயலாற்றியவர். வைத்தியசாலையை இயங்க வைத்ததோடு, மக்களுக்கு அந் நெருக்கடியான வேளையிலும் பெரும் சேவை புரிந்தவராவார்.

அதிலும் இந்திய இராணுவம் தமிழ்ப் பிரதேசத்தை ஆக்கிரமித்திருந்த போதும், இரண்டாம் கட்ட ஈழப்போரின் போதும் அவர் ஆற்றிய சேவையானது, அவரது வைத்திய துறைச் சாதனைக்கு மட்டுமல்ல, அவரது மண்பற்று, துணிவு, தமிழ் மக்கள் மீது அவர் கொண்டிருந்த பற்று என்பனவற்றை வெளிக்காட்டுபவையாகும்.

அமரர் டாக்டர் பொன்னம்பலம், மக்களையும் மண்ணையும் எவ்வாறு நேசித்தாரோ அதுபோல் அடிமைத்தளையில் இருந்து தமது இனம் விடுபடவேண்டும் என்ற பெருவிருப்பும்கொண்டிருந்தார். இதற்கு இரண்டாம் கட்ட ஈழப் போரின் போது விடுதலைப் போராளிகளுக்கு அவர் புரிந்தசேவை எடுத்துக் காட்டாகும். இரண்டாம்கட்ட ஈழப் போரில் பெரும் சமர்கள் பலவற்றை விடுதலைப் போராளிகள் சந்தித்து, பெரும் எண்ணிக்கையில் காயப்பட்ட வேளை அவர்களின் உயிர்களைக் காப்பாற்ற இவர் ஆற்றிய சேவை மகத்தானது. இது அவர் தனது மண்ணின் விடுதலைக்கு ஆற்றிய அளப்பரிய சேவை என்பது வெள்ளிடைமலை.

அத்தோடு அமரர் டாக்டர் பொன்னம்பலம், ஓய்வு பெற வேண்டிய வயது, உடல் நலத்தை பாதிக்கும் நோய் இவை இரண்டையும் பொருட்படுத்தாமலே தனது சேவையைத் தொடர்ந்தார். தனது தேவை, ஆரோக்கியம் என்பனவற்றை விட தமிழ் மக்களின் தேவையும், சேவையுமே அவருக்கு முக்கியமானதாக இருந்தது; அதற்காகவே இறுதிவரை அவர் உழைத்தார்.

இவ்வாறாக மக்களையும், மண்ணையும் நேசித்த ஒரு வைத்திய நிபுணரை தமிழ்மக்கள் இழந்திருப்பது ஒரு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். ஆனால் இறுதிவரை மக்களையும், மண்ணையும் நேசித்த அவரின் புகழ் இம் மண்ணிலும், மக்களின் மனங்களிலும் என்றும் நிறைந்தே இருக்கும்;

சூழ்நிலைக்கு மிகவும் அவசிய ... த்த நோயாளர்களின் வைத் ... நோயின் பிடியில் சிக்கிக

# ஆயுத யுத்தத்திற்கு பதில் அபிவிருத்தி யுத்தம் நடக்கும்

## பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த

(கொழும்பு)

ஆயுத யுத்தத்திற்கு பதில் அபிவிருத்தி யுத்தத்தையே நாம் நடாத்தப் போகின்றோம் இவ்வாறு படையினர் மத்தியில் பேசிய பாதுகாப்பு துறை பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்த தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில் கட்டம் கட்டமாகவே புலிகளுடன் பேசி வருகிறோம் எனவும் குறிப்பிட்டார்.

ஆயுத யுத்தத்திற்கு பதிலாக அபிவிருத்தி யுத்தத்தையே நாம் நடத்தி வருகின்றோம்; அதில் முப்படையினரும் தொண்டர் அணியினரும் ஈடுபடுவார்கள். எனவே யுத்தம் நின்றுவிட்டால் வேலை பறிபோய்விடும் என்று தொண்டர் அணியினர் அச்சமுற வேண்டியதில்லை.

அமைச்சர் ரத்வத்த மேலும் தெரிவித்ததாவது, இந்நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும், நிலைநாட்டப் படுவதை வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் மட்டுமன்றி தென் பகுதி மக்களும் விரும்புகின்றனர். இந்தஇரு இன மக்களும் விலைமதிப்பற்ற உயிர்களை யுத்தத்தில் இழந்து வருகின்றனர் இந்த உயிரிழப்புகளை பார்த்து லங்கா மாதாவே இரத்தக் கண்ணீர் வடிக்கிறாள். நாங்கள்தேர்தல் காலத்தில் நாட்டின் இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகண்டு அமைதியை நிலைநாட்ட வாக்களிக்கும்படியே மக்களைக் கேட்டுக் கொண்டோம் அந்த ஆணையை மக்கள் எமக்கு அளித்துள்ளார்கள் அதை நிறைவேற்றவேண்டிய காலகட்டம் இப்போது வந்துள்ளது

கடந்த கால தவறுகளை விட நாங்கள் தயாராக இல்லை. பகிரங்கப் பேச்சு வார்த்தைகளே நடைபெறும். இதில் நீங்கள் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. யுத்தம் முடிவடையும் போது முப்படையினரும், தொண்டர் அணியினரும் வேலை இல்லாமற் போய்விடும் எனக் கவலைப்படத் தேவையில்லை நாங்கள் தயாரித்துள்ள அதே திட்டத்தில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் இதுவரை நாட்டுக்காகப்போராடிய உங்களை நாங்கள்ஒருபோதும்நடுத்தெருவில் கைவிடமாட்டோம் யுத்தத்திற்கு பதிலாக நாங்கள் அபிவிருத்தி யுத்தத்தை நடத்தப்போகிறோம் தொண்டர்களாகிய நீங்கள் அதை செயற்படுத்தும் வீரர்கள் பிரபாகரனுடன் நடத்தும் பேச்சுக்களின்போது நாங்கள் நாட்டைக் காட்டிக்கொடுக்க தயாராக இல்லை எனவும் தெரிவித்தார்.

இதன் பின்னர் படையினர் பலரும் அமைச்சரிடம் கேள்விகள் கேட்டனர். அதற்கு பதிலளித்த அமைச்சர் சமாதானம் வந்த பின்பு எவரும் ஆயுதங்களை வைத்துக் கொள்ள முடியாது. ஆயுதங்களைமுப்படையினரும்பொலிசாரும் குறிப்பிட்ட ஒரு சிலரும் மட்டுமே வைத்திருக்க முடியும். ஆயுத பாவனை தொடர்பாக ஆயுத உபயோக சட்டம் இருக்கிறது இந்த சட்டத்தையும் திருத்தி இருக்கிறோம். அது தொடர்பான சட்டத் திருத்தங்கள் எதிர் வரும் பாராளுமன்ற அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படும். சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போர் மீது வழமையான சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்'' எனத் தெரிவித்தார். பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்தால் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் எனக் கேட்கப்பட்டபோது,

சமாதானம் எமது முதலாவது கட்ட நடவடிக்கைஆகும். அதில் விருப்பத்தக்க நிலையும் இல்லாமல் இல்லை. அப்படி ஒரு நிலை வராது என்றே நாங்கள் நம்புகிறோம் அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டு உத்தரவு பிறப்பிக்கமாட்டேன் உங்களுடன் போர் முனையில் நின்று நிமிர்ந்து கொண்டே உத்தரவு பிறப்பிப்பேன் எனத் தெரிவித்தார்.

## பரிசளிப்பு விழா

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ் வலயம்-2 பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவானந்தனும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதனும், சண்டிலிப்பாய் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி அன்பரசியும், கௌரவ விருந்தினராக க. கிருஷ்ணேஸ்வர சர்மாவும் கலந்து கொண்டனர்.

முட்டுப்பட்டவர்களென்றால்
தொட்டுப்பார்க்காத மருத்துவர் உண்டு
தனியார் மருத்துவமனைகளில் சிரிக்கும்
தர்ம ஆஸ்பத்திரிகளில் சிடுசிடுக்கும்
'' தவரச நாயகர்கள் '' நிறையவே உண்டு
நீ மட்டும்
அப்பனுக்கும், சுப்பனுக்கும்
அளவுகோல் ஒன்றான அதிசயம்.
'' பொன்னம்பலம் ''
ஒரு மனிதனின் பெயரல்ல...
ஒரு புனிதனின் திருநாமம்.

# நம்பிக்கை, நல்லெண்ணம் கட்டிஎழுப்ப முயல்கிறோம்

## நீதி அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இருக்கும் வேளையில் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும், பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இவ்வாறு வெளிநாட்டு வர்த்தகம், நீதி, மற்றும் அரசியலமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர்பீரிஸ் மேலும் கூறுகையில், இனப்பிரச்சினை ஒரு சிக்கலான பிரச்சினையாகும். இப் பிரச்சினை படிப்படியாக பொறுமையுடன் கையாளப் படவேண்டிய ஒன்றாகும் இனப்பிரச்சினையைச் தீர்ப்பதற்கு நம்பிக்கை அவசியமானதாகும் எனவும் தெரிவித்தார்.

# மலத்தியோன் பவுடர் கொழும்பிலும் இல்லையாம்

(யாழ்ப்பாணம்)

மலத்தியோன் பவுடர் கொழும்பிற்கு இன்னும் வந்து சேராதால் யாழ் மாவட்டத்தில் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மலத்தியோன் பவுடர் கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளினால் அண்மையில் மோசடிக்குள்ளானதினாலேயே கொழும்பிற்கு மலத்தியோன் வருவது தாமதமடைவதாக தெரியவருகின்றது.

இதே வேளை வரும் ஒக்டோபர் தொடக்கம் அடுத்த வருடம் பெப்ரவரிவரையும் மழைகாலமாதலால் யாழ் குடாநாட்டில் மலேரியா நோய் இக்காலத்தில் வழமையாக உச்சநிலைக்கு செல்வதுண்டு. தற்போது மலத்தியோன் கையிருப்பில் இல்லாமையும் கொழும்பிலும் மலத்தியோன் இல்லாத நிலையில் இருப்பதாலும் மலேரியா நோயை கட்டுப்படுத்துவது கடினமான தொன்றாகவே இருக்குமென அதனோடு தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன (சி)

# தியாகி திலீபன் நினைவாக இரவு நேர கலை நிகழ்ச்சி

(கொழும்பு)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு நாட்களின் ஐந்தாம் நாளான இன்று இரவு 7, 30 மணிக்கு வட்ட ரீதியாக பல கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன

இந்நிகழ்வில் வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில் புல்லாங்குழல் இசை, கல்லறையும் கதை பேசும் (நாடகம்) கோலாட்டமும் சங்கானை வட்டம் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில் பட்டிமன்றம், பேச்சு, மரணத்தை வென்றவர்கள் (இசை நாடகம்) கும்மி என்பன இடம் பெறுகின்றன

சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில் கவியரங்கு (உடுவில் வட்டம்) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (நாடகம்) காவடி என்பனவும் கோப்பாய் வட்டம் நீர்வேலி கந்தசாமி கோவிலடியில் பேச்சு, சுகுமார் இசைக்குழு, நிலைமைகள் (நாடகம்) நாட்டிய நாடகம் என்பனவும் நடைபெறவுள்ளன

நல்லூர் யாழ். வட்டங்கள் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் இன்னிசைக் கச்சேரி தொடரும் பயணங்கள் [நாடகம்] கோலாட்டம் என்பனவும் தீவக கோட்டம் அரியாலை நாச்சிமார் கோவிலடியில் [மாம்பழம் சந்தியில்] பேச்சு, விடிவிற்காய் விரைந்தவர்கள் (நாடகம்) கோலாட்டம், கும்மி என்பனவும் இடம்பெறுகின்றன.

வடமராட்சி கோட்டம் உடுப்பிட்டி வட்டம் உடுப்பிட்டி சந்தி வைரவர் கோவிலடியில் கரகம், காவடி, வில்லுப் பாட்டு (சின்னமணி குழு) நாட்டிய நாடகமும், பருத்தித்துறை வட்டம் மந்திகை அம்மன் கோவிலடியில் பேச்சு, பாசமுடிவு (நாடகம்) கோப்பாய் வட்டம் கிராமிய நடனம். கரவெட்டி வட்டம் துன்னாலை கலிகைக் கந்தன் ஆலய முன்றலில் பேச்சு, தூரம் அதிகமில்லை(நாடகம்] வில்லுப்பாட்டும் இடம்பெறுகின்றது.

தென்மராட்சிக் கோட்டம் கைதடி வட்டத்தில் கைதடிச் சந்தியில் பேச்சு, கும்மி, கரகம், புயலாய் எழுவோம் [நாடகம்]. சாவகச்சேரி வட்டம் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் பேச்சு, கயிற்றுக்காவடி, போராடும் பூமி (நாடகம்), கரகமும், கொடிகாமம் வட்டத்தில் இரட்டைக் கேணி அம்மன் கோவிலடியில் பேச்சு வில்லுப்பாட்டு தாசம் (நாடகம்) கரகம் காவடியும் பளை வட்டம் இரட்டைக் கேணி அம்மன் கோவிலடியில் பேச்சு எழுச்சிப் பாடல்கள் களத்தில் மைந்தன் (நாடகம்) வில்லுப் பாட்டு என்பனவும் இடம் பெறுகின்றன

# தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாட்களின் ஐந்தாம் நாளான இன்று கோட்ட ரீதியாக உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறுகின்றன காலை 7மணிக்கு ஆரம்பமாகும் இவ் உண்ணாநோன்பு மாலை 5 மணிக்கு நிறைவடையவுள்ளது.

இவ் உண்ணாவிரத நிகழ்வில் வலிகாமம் கோட்டம் உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில் அளவெட்டி -மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையம், கலாஜோதி ச.ச. நிலையம், பரமானந்தா ச.ச. நிலையமும் சங்கானை வட்டம் வடகம்பரை அம்மன் கோவிலடியில் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில் ஆனைக்கோட்டை ... னாலை கலிகைக் கந்தசாமி கோவிலடியில் மொடேன், யாழ்ரன் கல்வி நிலையங்களும் உடுப்பிட்டி வட்டத்தில் நாவலடிவைரவர் கோவிலடியில்மாவீரர் படிப்பகம் நித்தி ச.ச. நிலையம் நியூற்றன் ச ச. நிலையம், கலைவாணி ச.ச. நிலையம், சிறி அம்பாள் ச.ச நிலையம், இமையாணன் அ, த.க. பாடசாலையும் கலந்து கொள்கின்றன.

தீவகக் கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில் மண்கும்பான் அரசினர் த,க. பாடசாலை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், கரம்பொன் சண்முகநாதன் வித்தியாலயம், சின்னமடு றோமன் க.த. பாடசாலை, மணியரசன் சாம்சன் குடியிருப்பு மக்கள் கலந்து கொள்கின்றனர்-

தென்மராட்சிக் கோட்டம் கைதடி வட்டத்தில் கைதடிச் சந்தியில் நடைபெறும் இன்றைய ழ்ண்ணாவிரத நிகழ்...

# தொண்டாவுக்குவிரைவில்மந்திரிபதவி சந்திரிகாவுடனானபேச்சில் முடிவு

இ தொ. கா. தலைவர் தொண்டமான் விரைவில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் இணைவார் எனவும் அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் தொண்டமானுக்கும் பிரதமர் சந்திரிகாவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களையடுத்து இம் முடிவு எடுக்கப்பட்டது தொண்டமான் பொ. ஐ. மு தேசியப் பட்டியல் மூலம் தெரிவாவார் இது குறித்துகருத்து வெளியிட்ட ஐ. தே. க பொதுச் செயலர் காமினி விஜேசேகர அப்படி ஏதும்' நடைபெற்றால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்,

## 173 ஆயுதப்

செய்திகள் மூலம் தெரியவருகின்றது. கடற்படையில் எட்டுப் பேர் இறந்ததாகவும் பதினொரு பேர் காயமடைந்ததாகவும் இரண்டு பேர் காணாமல் போனதாகவும் கூறப்பட்டுள்ளது. பொலிஸ் படையில் 44 பேர் கொல்லப்பட்டதாகவும் 60 பேர் காயமடைந்ததாகவும் 2 பேர் காணாமற் போனதாகவும் கூறப்படுகிறது. ஊர்காவல் படையில் ஐந்து பேர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர் எனவும் நால்வர் ஆயுதங்களுடன் காணாமற் போயினர் எனவும் கூறப்படுகின்றது. விமானப்படையில் மூவர் கொல்லப்பட்டும் இருவர் காயமடைந்தனர் எனவும் கூறப்படுகிறது.

## முன்னைய

களின் போது அனைத்து அரசியல் கட்சிகளும் அதில் சம்பந்தப்படசெய்வோம்- இரகசிய பேச்சுக்கள் ஏதும் இராது-

அண்மையில் நான் வடக்கிற்கு படையினரை சந்திப்பதற்காக சென்ற போது அவர்கள் கேட்ட கேள்விகள் இவை தான்- முன்னர் நடந்தது போல் பேச்சுகளின் போது படைகள் முகாம்களுக்குள் முடக்கப்படுமா? சமாதானப் பேச்சுகள் நாடு பிளவுபடுத்த வழி செய்யுமா? ஆயுத குழுக்களின் ஆயுதங்கள் களையப் படுமா? என்பவையே- அவற்றுக்கு நான் அப்படி எந்த தவறும் இம்முறை நடைபெறாது என கூறினேன் எனவும் அமைச்சர் அப்பேட்டியின் போது குறிப்பிட்டார்-

## நெடுங்கேணி

சின்னப்பர்வீதி, சுண்ணாகம் மேற்கு, சுண்ணாகம்) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2-ம் லெப்.நாதன் வீரவேங்கை அரசமணி ஆகிய இருவரது வித்துடல்களும் இன்றுபி.ப 3 30மணியளவில் சுண்ணாகம், கந்தரோடை ஐயன்னார்ச ச. நிலையத்திற்கு அவரவர் இல்லங்களிலிருந்து

## மட்டக்களப்பில்

டெஸ்மன் (வீரக்குட்டி முருகமூர்த்தி, மட்டக்களப்பு)

★ 2-ம் லெப் ஈசன்/பெரியவர் (வைத்திலிங்கம் நவரட்ணம், மட்டக்களப்பு)

★ வீரவேங்கை மயூரக்கண்ணன் (குமாரசாமி பிரமதீசன், மட்டக்களப்பு)

★ வீரவேங்கை தவரதன்/தவச்செல்வன்(கதிரவேல் பிள்ளை, சுவிக்காந்தபவி, மட்டக்களப்பு)

ஆகியபோராளிகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

வீரச்சாவடைந்த ஆதரவாளர்களான:

★ வடிவேல்(மட்டக்களப்பு)

★ ஜோகன் (மட்டக்களப்பு)

ஆகியோருக்கும் விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## புலிகள்

ஊவா மாகாணம் ஆகிய பகுதிகளில் ஐ. தே. க வெற்றி பெற்றது இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: நான் அவற்றைத் தமிழ் வாக்குகள் எனக் கருத மாட்டேன். அவை ஐ. தே. க வாக்குகள், கட்சியின் அடிப்படையில் அளித்த வாக்குகளே அவை. மலையகத்தில் சிறுபான்மையினர் வாக்குகள் அதிகம். அங்கு அவர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர்.

கேள்வி: ஐ.தே கவை எவ்வாறு வெற்றிக் கட்சியாக புனரமைக்க உத்தேசித்துள்ளீர்கள்?

பதில்: கீழ் மட்டத்திலிருந்தே புனரமைப்பு செய்யப் போகிறேன்.

கேள்வி; ஐ தே. கவின் 17 வருட ஆட்சிக் காலத்தில் அது இனப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறி விட்டதாக குற்றஞ்சாட்டப்படுவது குறித்து என்ன கருதுகிறீர்

ளப்பட்டது. ஒரு மொழி இனத்தவருக்கு சொந்தமான நாடு என்ற கருத்து தகர்க்கப்பட்டது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு நான் பெரிதும் கருவியாக இருந்தேன். இதனால் எனது அரசியல் எதிர்காலத்திற்கும் பெரும் ஆபத்தை தேடிக் கொண்டேன். எனது அரசியல் புதைகுழியை நான் கண்முன்னே கண்டேன். சில பகுதி மக்களின் வெறுப்பிற்கும் ஆளாகினேன். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஐ. தே. க முயற்சிக்கவில்லை எனக்கூறுவது அபத்தம். புலிகளின் பலத்தைப் பற்றி தவறாக மதிப்பீடு செய்து விட்டோம். இவற்றையெல்லாம்சரி செய்து இனப்பிரச்சினையைத் தீர்க்க வழி செய்வோம். இது எமது உறுதியான நிலைப்பாடு.

கேள்வி; தொண்டமான் நிலைப்பாடு குறித்து?

பதில்: அவர் எங்களை விட்டுப் பிரியமாட்டார் என நம்புகிறேன். அவர் ஐ. தே. கவின் 17 வருட கால

## தேர்தல்

ளார். இக்குழுவின் அங்கத்தவர்கள் முன்னதாக யாழ்ப்பணம் சென்று இது தொடர்பாக நிலைமையை ஆராய்வார்கள் எனவும் தெரியவருவதாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது-

இது தொடர்பாக சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளரும் அமைச்சருமான தர்ம சிறி சேனநாயக்காவிடம்கேட்கப்பட்டபோது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா யாழ்ப்பாணம் செல்ல திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

## எறிகணை

காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பகுதிமீது இரண்டு தடவைகளில் மூன்று ஷெல்கள் ஏவப்பட்டதில் குடியிருப்புக்கள் பல சிறு சேதங்களிற்கு உள்ளானது. (88)

# நெடுங்கேணியில் மோதல் 3 போராளிகள் வீரச்சாவு



2-ம் லெப். நந்தன்



2-ம் லெப். நாதன்



வீரவேங்கை அரசமணி

17-09-1994 அன்றுமுல்லை மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்தில்சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர் மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.


# மட்டு. மோதலில் வீரச்சாவடைந்தோர்



2 ம் லெப். வளவன்



2-ம் லெப். தவம்





நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில் அனைத்து தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய் வட்டத்தில் நீர்வேலிகந்தசுவாமி கோவில் முன்றலில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, அத்தியடி சைவப்பிரகாச வித்தியாசாலை, அத்தியடி மெதடிஸ் மிசன் தமிழ்கலவன் பாடசாலை, நீர்வேலி சீ. த. க. பாடசாலை தையல் நிலையம், றெட்பானா உலர்வலையம் மாதர் சங்கம் சனசமூக நிலையங்கள் என்பனவும் யாழ்- நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் தபால் திணைக்களம், வைத்தியசாலை நலன் புரிச் சங்கம் சாயி மருத்துவக் கல்லூரியினரும் கலந்து கொள்கின்றனர்.

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் கோவிலடியில் பொலிகண்டி தையல் பயிற்சி நிலையத்தினரும் கரவெட்டி வட்டத்தில் துன்

தென்மராட்சிக் கோட்டம் கைதடி வட்டத்தில் கைதடிச் சந்தியில் நடைபெறும் இன்றைய ழ்ண்ணாவிரத நிகழ்வில் தனங்கிளப்பு, கோணேஸ் சனசமூக நிலையங்கள் மற்றும் தும்புக்கைத்தொழில் நிலையமும் கலந்து கொள்கின்றன- சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் கல்வயல், நுணாவில் மீசாலை அறவழி ஊழியர்கள் ஆசிரியர்களும் கொடிகாமம் வட்டத்தில் புகையிரத நிலையத்திற்கு அருகில் குடமியன், இளங்கோ, நாவற்கா, புனைவேலி ச-ச- நிலையம், வர்த்தகர் சங்கமும் பளைவட்டம் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில் சமுத்திரன் குடியிருப்பு, செந்தில் நகர் தெ-ப-வ-அ. கூ- சங்கமும் கலந்து கொள்கின்றன-

கடற்புலிகள் வட்டத்தில் வலிகாமம் கிழக்கில் நாவாந்துறை வில்லூன்றிப் பிள்ளையார் கோவில் முன்றலிலும் வடமராட்சி கிழக்கில் செம்பியன்பற்றிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இன்று இடம் பெறுகின்றன-

இன்று ப. 3 . . . . . . சுண்ணாகம், கந்தரோடை ஐயன்னார்ச ச. நிலையத்திற்கு அவரவர் இல்லங்களிலிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இவ்விரு மாவீரர்களுக்கும் மக்களின் இறுதி வீரவணக்கமும், இறுதி வீர வணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் சுண்ணாகம் சந்தியை அடைந்து காங்கேசன்துறை வீதியூடாக மருதனார்மடம் சந்தியில் மானிப்பாய் கைதடி வீதியால் திரும்பி உரும்பிராய் சந்தி, இராசபாதைச் சந்தியைச் சென்றடைந்து இராசபாதை யூடாகக் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சென்றடைந்து அங்கு சகல இராணுவ மரியாதைகளுடனும் இரு மாவீரர்களது வித்துடல்களும் புனித விதைகுழியில் விதைக்கப்படும்-

மேற்படி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2-ம் லெப், நந்தன் அவர்களின் வித்துடல் அவரது இல்லத்திலிருந்து இன்று மு.ப. 10 00 மணிக்குக் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்கள் இறுதி வீர வணக்கமும், இறுதி வீர வணக்கக் கூட்டமும், நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

## கடற்படை

நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தார். இவரது கட்டுமரம் மற்றையவர்களால் மீட்டு வரப்பட்டது.

சம்பவத்தின் போது இறந்த மீனவரது சாரம் தேடுதலின் போது தென்பட்டது. அதனைத்தொடர்ந்து நேற்று மாலை வரை தேடுதல் நடைபெற்றது. (யோ)

யைத் தீர்க்கத் தவறி விட்டதாக குற்றஞ்சாட்டப்படுவது குறித்து என்ன கருதுகிறீர்கள்?

பதில்; இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பல வழிகள் கூறப்பட்டன அதிகாரப் பரவலாக்கல் ஏற்றுக்கொள்

விட்டுப் . . . . . . என நம்புகிறேன். அவர் ஐ. தே. கவின் 17 வருட கால நண்பர். தோட்டத் தொழிலாளரின் நலனுக்காக அவர் பதவிக்குவரும் எந்த அரசையும் பகைத்துக்கொள்ள விருப்பவில்லை.


வெளிவந்துவிட்டது!

வள்ளுவம்

இது மாதமொரு இதழ் ஆகும்

இதழின் விலை:

2 ரூபா 50 சதம் மட்டுமே.

(சி-10358)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு நாகம்மா

புங்குடு தீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. முருகேசு நாகம்மா அவர்கள் கொழும்பில் 13-9-1994 அன்று காலமாகி விட்டார். அன்னார் காலம் சென்ற திரு. நாகலிங்கம் முருகேசுவின் அன்பு மனைவியும், காலம் சென்ற சரஸ்வதி, கிருபாகரன் (ஆசிரியர் குளோடன் அரசினர் தமிழ் பாடசாலை, நாபொட) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கமலா - கிருபாகரனின் (யாழ் போதனா வைத்தியசாலை), அன்பு மாமியாரும், மணிவண்ணன் திருமதி மணிவண்ணன், விஷ்ணுதாஸ், யாழினி, தமிழினி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 17-9-1994 அன்று கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்,

தகவல்.

கி. விஷ்ணுதாஸ்
(கண்ணன்)

73, மணல்தறை
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(9454)

## சபாரத்தினம் கவிதாஸ்

(நந்தன்)

கொடிகாமம் கச்சாய்வீதி சி. சபாரத்தினம் (கூட்டுறவுப் பரிசோதகர்) பிரேமாவதி சபாரத்தினம் (கணக்குப் பதிவாளர், பனை. தெ. வ அ. கூ. சங்கம் கொடிகாமம்) அவர்களின் சிரேஷ்ட புத்திரன் கவிதாஸ் மணலாறு மாவட்டத்தில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சி. சபாரத்தினம்
(கூ. பரிசோதகர்)

கச்சாய்வீதி,
கொடிகாமம்.

(9451)




2-ம் லெப். இசையாளன்



2-ம் லெப். விதுசன் (நளின்)



2-ம் லெப். கஜவரதன் (டெஸ்மன்)



2-ம் லெப். ஈசன் [பெரியவர்]



வீரவேங்கை மாயக்கண்ணன்



வீரவேங்கைதவரதன் [தவச்செல்வன்]

15-09-1994 அன்று மட்டக்களப்பு மாவட்டம் நெடுஞ்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் 8 போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்-


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது